# ஜல விவசாயி.

மலர்-2 இதழ்-4

ஆடி - 1928.

JL
J684m211,N27
N28.2.4
159615

Registered No. M. 2200.

விபவ ஸு
மலர் 2

179

ஆடி மீ
இதழ் 4

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்திலிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

---

## THE CARDAMOM PLANTER,

**THE ORGAN of The Travancore Cardamom Planters' Association.**

---

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# பொருள் அடக்கம்.

தொடர் எண். பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | விவசாயிகளுக்கு | 118 |
| 3. | இலங்கையில் கிருஷி அபிவிருத்தி | 130 |
| 4. | ஏல விவசாயத்தைப்பற்றிய ஓர் குறிப்பு | 133 |
| 5. | "ஏல விவசாயி"யும் ஏல விவசாயிகளின் கடமையும் | 143 |
| 6. | கைத்தொழில் | 148 |
| 7. | மிளகு | 156 |
| 8. | காலஞ்சென்ற புதுக்கோட்டை மன்னர் | 160 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| சங்கத்தினர் அல்லாதவருக்குச் சந்தா | ரூ | 2—0— |
| அயல் நாடுகளுக்கு | ரூ | 2—8— |

குறிப்பு:—

வியாசம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு வியாசகாரர்களே பொறுப்புதாரர்களாவர்.

உ

# "ஏல விவசாயி"


திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்!
(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

| மலர் 2 | உத்தமபாளையம். விபவ ஸ்ரீ ஆடி மீ 1928 ஸ்ரீ ஜூலை—ஆகஸ்ட் மீ | இதழ் 4 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகியச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்திரமாய்த்
திரமாகி நானாவிதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகியைம்
புலனுமா யைம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி
யின்றாகி நாளையாகி
என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா
யிவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவ
ரறிவதற் கெளிதாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (தாயுமானவர்.)

# விவசாயிகளுக்கு

## முற்கால இந்தியா

இந்தியா விவசாயத்தையே அதிகமாக நம்பியுள்ள தேசம். கங்கா, சிந்து முதலிய வளப்பம் வாய்ந்த நதி தீரங்களை மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்களை இழுத்து இங்கு குடியிருக்கச் செய்தன. ஞாபகத்திற்கே எட்டாத காலத்திலிருந்து இந்நாடு விவசாயத்திலும், கைத்தொழிலிலும் பெயர் பெற்றிருந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல பலவாகும் இதற்குச் சான்றுகள். கவலையின்மையால் கிருஷித்தொழில் இந்தியாவில் நாளடைவில் சீர்கேடு அடைந்துகொண்டேவந்தது. இந்தியாவின் புராதனப் பெருமைகளெல்லாம் மங்கி மறைந்துவிட்டன. இப்பொழுது இவைகள் அப்படி இப்படியென்று எழுத்தில் இருக்கின்றன. பண்டைப் புகழைத் தவிர்த்து, தற்காலத்தில் இந்தியா எதிலும் சிறந்து விளங்குவதாகத் தெரியவில்லை.

## தற்கால இந்தியா

நமது ஜென்ம தேசத்தின் தற்கால விவசாய நிலைமையைப் பற்றிக் கவனிப்போம். நாம், நமது மாதுரு பூமியை ஒரு கண்டமென அதாவது பாதகண்டமெனப் பெருமையுடன் அழைத்துக் கொள்ளுகிறோம். ஒரு காலேஜின் பிரின்சிபால் ஒருவர் "இந்தியாவும் ஒரு தேசமா?" என்று தாழ்வாக வியாக்கியானம் செய்ய ஒரு சமயத்தில் ஆரம்பித்துவிட்டார் என்று தெரிவதால், நமது தேசத்தின் நிலைமை எவ்வளவு கேவல ஸ்திதியிலிருக்கிறதென்பதைச் சிறிது கவனியுங்கள். இந்தியாவின் ஜனத்தொகை 32



கோடி. இதில் விவசாயிகள் 28 கோடி. இப்பொழுது பயிராகும் நிலம் 22½ கோடி ஏக்கர். இன்னும் பயிர் செய்யக்கூடியது 15 கோடி ஏக்கர் நிலம். இந்நாட்டில் ஒவ்வொரு விவசாயியும் பயிராக்கும் நிலம் சராசரி ¾ ஏக்கர். இங்கு 100 பேர்களுக்குக் கால் நடைகள் 59. நம் தேசத்திற்கு வேண்டிய உரம் 43 கோடி டன். இப்பொழுது உபயோகிப்பது 1¾ கோடி டன். அதிகமான உரம் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், நமக்குப் போதியபடி உரம் கிடைப்பதில்லை. சராசரி வருமானமோ நாள் 1-க்கு நபர் 1-க்கு இந்தியாவில் ரூ 0—1—7. கானடாவில் ரூ 1—12—0. இங்கிலாந்தில் ரூ 2—0—0. ஆஸ்திரேலியாவில் ரூ 2—4—0. அமெரிக்காவில் ரூ 3—0—0 கிடைக்கிறது. 1911 வருஷத்தில் கவர்ன்மெண்ட் மாக்லகான் துரையின் கணக்குப்படி விவசாயிகளின் கடன் ரூ 300 கோடி. போதாக்குறைக்கு முக்கிய மூலப்பொருள்களெல்லாம் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுச் சென்றுவிடுவதால் கைத்தொழில் விருத்தியாக வழி கிடையாது. சாஸ்திரீய விவசாயத்தின் மூலம்தான் ஏழை இந்திய விவசாயிகள் மேன்மையடைய வேண்டியதிருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு மூலதனமோ கிடையாது. இவர்கள் எத்தொழிலிலும் விரிவாகப் பிரவேசித்த வழக்கம் கிடையாது. சாஸ்திரீய விவசாயம் செய்யத்தெரியாது. எதேஷ்டமாகப் பணத்தை விவசாய விஷயத்தில் செலவு செய்வது கிடையாது. லார்டு கர்ஸன் 44 கோடி ரூபாய் மூலதனம் ஒரு விஷயத்தில் போட்டார். சர் கேபிள் என்பவர் 30,00,00,000 பவுன் மூலதனம் போட்டு வேலை செய்தாராம். உதவி இன்ஜினியராயிருந்து பின்பு விவசாயத்தில் ஈடுபட்டு, நல்ல வேலை செய்து, பல லட்சம் ரூபாய் சம்பாதித்து, பற்பல தருமங்கள் செய்து பாஞ்சாலக் கர்ணன் என்று புகழ்பெற்ற சர் கங்கா ராம் என்ற பிரபு தான், விவசாயத்தில் தன் சுய முயற்சியால் பணம் இந்தியாவில் சம்பாதித்தவர் என்பதை உலகின் மற்ற பாகத்தினர்கள் அறிவார்கள். விதவை ஒருவர் இருக்கும் வரை அவர் நற்பெயர் இருந்தே இருக்கும்.

## ஜப்பான்

வெளியில் சென்று வேற்று நாடுகளைப் பார்ப்போம். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களைக் காட்டிலும் அளவில் 20ல் 1 பங்குள்ளதும், 1,42,000 சதுர மைல் விஸ்தீரணங் கொண்டதுமான ஜப்பான் (நிப்பன்) தேசமானது மிகச் சிறியதாயிருப்பினும், அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதியைத் தன்னகத்தே யடக்கிக்கொண்டிருக்கும் ஜப்பான் தேசமானது, தனது 5,60,00,000 ஜனங்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. 5.60,00,000 ஜப்பானியர்கள் 1,50,00 000 ஏக்கர் நிலங்களைக் கிருஷி செய்கிறார்கள். சராசரி 1 ஏக்கர் நிலத்தில் 4 பேர்கள் பிழைக்க வேண்டியதிருக்கிறது. பார்மோசாத் (Formosa) தீவும், சகலீனில் ஒரு பாகமும், கொரியாவும், தெற்குக் கடல்களும், தென் மஞ்சூரியாவும் ஜப்பானுடன் சேர்ந்த பிறகுதான் ஜனங்கள் பெருகிக்கொண்டு வரும் ஜப்பானுக்குச் சிறிது சௌகரியமாயிருக்கிறது.

அங்கு விவசாயம் நமது நாட்டைப் போன்றுதான் நடைபெறுகிறது. மனித தேக உழைப்போடு சாதாரண ஆயுதங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. சிலவிடங்களில் அமெரிக்க ஆயுதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் உரத்திற்காக மட்டும் 20,00,00,000 என் (என் = ரூ. 1—8—0) குறைந்தது செலவு செய்யப்படுகிறது. இவ்வாறு தக்கபடி உரமிட்டு, நல்ல நவம் நவமான முறைகளைக் கையாண்டு ஊக்கத்தோடும் உறுதியோடும் உழைத்ததின் பயனாக ஜப்பானியர்களுக்கு விவசாயத்தில் வருமானம் கிடைக்கிறது.

ஜப்பான் அரசாங்கத்தாரால் சீர்திருத்த வேலைகள் அதிகமாக நடைபெறுவதால், ஜனத்திரள் முன்னேறப் பல வழிகளும், பல சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. ஜனங்களுக்குத் தரிசு நிலங்களைக் கொடுத்து, செலவில் 100ல் 40 பங்கும் சர்க்கார் கொடுக்கிறார்கள். விளைவை அதிகப்படுத்தும் பொருட்டு நிபுணர்களைக் கொண்டு நிலங்களுக்கு வடிகால் வெட்டும்படி சர்க்கார் செய்கிறார்கள். விவசாயப் பண்ணைகளுக்குச் சர்க்கார் சரியான உதவி செய்கிறார்கள். பூமி வாங்குவதற்கும், அதைச் சீர்படுத்தவும் 50 ௵ நெடுங்காலக் கடன்களும், உரம் விவசாயக்கருவிகள் முதலியவைகள் வாங்குவதற்கு 5 ௵ குறைந்தகாலக் கடன்களும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இது நீங்கலாக பாங்குகளும், விவசாயப் பாங்குகளும், கைத்தொழில் பாங்குகளும், விவசாயக் கடன் சங்கங்களும் விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு இருக்கின்றன. சாஸ்திரீய விவசாய நிபுணர்களும் விவசாயத்தில் புதிய முறைகளைக் கண்டுபிடித்துத் தேசத்திற்கு நன்மைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். சர்வ கலாசாலையின் விவசாயக் காலேஜும் (Agricultural College of Imperial University) வேண்டியபடி விவசாயிகளுக்கு உதவிசெய்துகொண்டிருக்கிறது. விளை பொருள்களை விற்றுக்கொடுப்பதிலும் ஜப்பான் அரசாங்கம் ஆதரவு அளிக்கிறது. கால்நடை வளர்ப்பதிலும் குடியானவர்கள் உற்சாகிக்கப் படுகிறார்கள். கோழி வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல் முதலிய குடிசைத் தொழில்களும் அதிகமாக அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஜப்பான் ஒரு சிறிய கீழ்த்திசைத் தீவாயிருந்த போதிலும் எவரும் ஸ்தம்பித்து நின்று யோசிக்கும்படியாக எவ்வளவோ முன்னேற்றம் வெகு வேகத்தில் அடைந்துகொண்டு ஓடுகிறது. சமீப காலத்தில் ஜப்பானில் பூமி அதிர்ச்சி ஏற்படாவிடில், ஜப்பானின் சரித்திரம் எப்படியோயிருக்கும்!



## சீன தேசம்

சீன தேசத்தில் 4,000 வருடங்களாக விவசாயிகள் கிருஷி செய்யினும், அத்தேசத்துப் பூமியின் சத்து குறைந்து கெட்டுப் போகாமல் இருக்கிறது. காரணம்? மனிதர்களால் வெளியிடப்படும் மல மூத்திரங்களைக்கொண்டு எரு தயாரித்து ஒவ்வொரு கிருஷிக்கும் ஒவ்வொரு பயிருக்கும் தகுந்த முறைப்படி உரமிடுவ

தால், அங்கு நல்ல மகசூல் கிடைக்கிறது. சீனாவில் ஷாங்காய் என்ற நகரத்தில் மல மூத்திரங்களை வீடுகளிலிருந்து குத்தகைதாரரின் சொந்தச் செலவில் வெளியேற்றும் செலவைத் தவிர்த்து 6 லட்சம் ரூபாய் குத்தகையும் கொடுக்கிறார்கள் என்றால் அங்கு மல எருவின் மகிமை எப்படியிருக்குமென்று சிந்தித்துப் பாருங்கள். சீனர்களிடமிருந்தும், ஜப்பானியர்களிடமிருந்தும் எரு சேகரிப்பதைப்பற்றி இந்திய விவசாயிகள் நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென சமீபத்தில் வந்த இந்திய விவசாயக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது.

## பிரிட்டன்

இங்கிலாந்து ஒரு கைத்தொழில் தேசமாயிருப்பினும், கேவலமான பூமிகளைக்கூடத் திருத்தித் தக்கபடி உரமிட்டு, சாஸ்திரீயக் கிருஷி செய்து, நல்ல லாபத்தைப் பெறுகிறார்கள் பிரிட்டிஷார்கள். அந்நாட்டுச் சர்க்காரும், சங்கத்தார்களும், நிபுணர்களும் விவசாய விஷயத்தில் விசேஷமாய்க் கவனித்து, ஊக்கத்துடன் உழைக்கிறார்கள். பால் கறப்பதற்குக்கூட இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன என்றால் வேறு வேறு விஷயத்தைப் பற்றி விவரிக்கத் தேவையில்லை. இன்னும் கொஞ்சக் காலத்தில் கிருஷி உயர்வுபெற்று விளங்குமென்பதற்கு அநேக அறிகுறிகள் தோன்றுகின்றன.

## டென்மார்க்கு

இத்தேசத்தின் மண்ணோ கேவலமானது. குளிர்காலமோ அங்கு வருஷத்தில் 8 மாசம். டேனிஸ் (டென்மார்க்கு தேசத்தவர்கள்) விவசாயிகளுக்குப் பிரத்தியேக விவசாய அறிவாவது தொழில் சாமர்த்தியமாவது கிடையாது. 1800-ம் வருஷம்வரையில் உணவுப் பொருள்கள், வெண்ணெய், பக்குவம் செய்யப்பட்ட பன்றி இறைச்சி, முட்டை முதலியவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அப்பொழுது சோள விளைவு செய்வதிலிருந்தே முக்



கிய வருமானம் அடையவேண்டியிருந்தது. உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களைக் காட்டிலும் டென்மார்க்கு தேசத்தில்தான் அதிகமான பசுக்கள் இருக்கின்றன. உலகின் மற்ற நாடுகளைப் பார்க்கிலும் காலநடைகளிலிருந்து உண்டாகும் வஸ்துக்களை ஏராளமாக உண்டாக்கி ஏற்றுமதி செய்கிறது டென்மார்க்கு நாடு. கொஞ்சங்குறைய 35,00,000 டென்மார்க்கினர்களின் சொந்த உபயோகம் போக 1,20,000 டன் வெண்ணெயும், 2,00,000 டன் பாடஞ்செய்த பன்றிக்கரியும், கிட்டத்தட்ட 96,00,00,000 முட்டைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வெண்ணெய், பக்குவம் செய்யப்பட்ட மாம்சம், முட்டை முதலியவைகளின் மொத்த ஏற்றுமதி இத்தேசத்தில்தான் அதிகம்.

டேனிஸ்காரர்களுக்கு ஒரு சௌகர்யம் என்னவென்றால், அங்கு ஒவ்வொருவருக்கும் கூடியமட்டில் போதியபடி யோசனையுடன் பூமிகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய நிலத்திற்கும் போவது இலகுவாயிருக்கிறது. சுமார் 150 வருஷங்களுக்கு முன் 100க்கு 90 பேர்கள் பண்ணைக் கூலிதான் செய்தார்கள். இப்பொழுது அது நிறுத்தப்பட்டது. 1,20,000 சிறிய நிலச்சுவான்தாரர்கள் அங்கு இருக்கிறார்கள். டேனிஸ் விவசாயிகள் விளைபொருள்களை விற்பதிலும் இதர சாமான்களை வாங்குவதிலும் ஐக்கிய முறையையே கையாடுகிறார்கள். இவ்வாறு ஐக்கிய இயக்கத்தில் உயர்வு பெற்றுக்கொண்டிருப்பது—அதிக லாபம் அடைந்து கொண்டிருப்பது—ஐக்கிய இயக்கத்திற்கு உதாரணமாக விளங்கி, உலகத்தாருடைய கவனத்தைக் கவர்ந்துகொண்டிருப்பது டென்மார்க்கு தேசம் என்று சொல்லவும் வேண்டுமோ? உலக ஏழை மக்கள் உய்வின்பொருட்டுத் தோன்றிய இந்த இயக்கத்தின் தந்தை சர் ஹோரேஸ் பிளன்கெட் வந்தனமளிக்கப்படுவாராக.

ஒவ்வொருவரும் எவ்வளவு பணக்காரர்களாயிருந்த போதிலும் தங்கள் தங்கள் நிலங்களில் வேலை செய்கிறார்கள். மாஜி

கிருஷி மந்திரியும் இப்பொழுது டென்மார்க்கு முதல் மந்திரியுமான கனம் மாட் சேன்—மைக்டல் கூட அவரது சொந்தப் பண்ணையில் சந்தோஷத்துடன் மற்றவர்கள் போன்று வேலை செய்கிறாராம். தான் தனது நிலத்தில் நன்கு வேலை செய்துகொண்டே டென்மார்க்கின் மற்ற குடியானவர்களின் வழக்கத்தை அனுசரித்து, குடியானவர்களின் பிள்ளைகளில் வேலை செய்யக்கூடிய சில பிள்ளைகளைத் தனது வீட்டில் கூட்டிவைத்து, வாரத்தில் பல தடவை அவர்களுக்குக் கல்வி கற்பிக்கிறாராம். அத் தேசத்துப் பண்ணை வேலைகள் மாணவர்களாலேயே அதிகமாகச் செய்யப்படுகின்றன. டென்மார்க்கு தேசத்தின் கல்வி அபிவிருத்திக்கே அதிகமாகக் காரணம் அந்நாட்டு விவசாய ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளே. (People's Agricultural Primary and High Schools) இப்பள்ளிக்கூடங்கள் பேர் பெற்றிருக்கிறது. நம் நாட்டில் இக்கல்விச்சாலைகள் உண்டாகுமா? நம்பிக்கைக்கு ஒன்றுமே ஆதாரமில்லை. பாதுகாப்பு எதற்கும் தேவையில்லாதபடி அவ்வளவு உயர்தரத்தில் டென்மார்க்குக் குடியானவர்கள் சாந்தியாய் வாழ்கிறார்கள். தனது ஜீவிய காலத்தில் டென்மார்க்கில் 10 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு அதிகமாக விருத்தி செய்யப்பட்டிருக்கிறதென்று ஒரு பத்திராதிபர் எழுதுகிறார்.

## அமெரிக்கா

அமெரிக்காவில், அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களே (U. S. A.) உலகில் செல்வத்தில் சிறந்தது; செல்வாக்கில் மிகுந்தது; கல்வியில் அதிக அபிவிருத்தியுள்ளது. அது சகல வளங்களும் மனிதப் பெருக்கும் கொண்ட நாடு. ஐக்கிய மாகாணங்களின் விஸ்தீரணம் 1,90,30,00,000 ஏக்கர். இதில் 50,30,00,000 ஏக்கர் உயர்தரமான நல்ல சாகுபடி நிலம். 1,10,00,00,000 நிலம் காடாகக் கிடக்கிறது. 100க்கு 28 பேர்கள் அதாவது 10,659,000 ஜனங்கள் லாபகரமாக விவசாயம் செய்கிறார்கள். இன்னும் 100க்கு 29 விதமாக 3,16,14,269 ஜனங்களும் விவசாயத்தொழில் செய்தே வாழ்கிறார்கள். பண்ணைகளுக்கு வெளியே விவசாய



வேலை புரிந்துகொண்டு 100க்கு 40 போக 4,24,36,776 ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். அங்கு 64,48,343 பண்ணைகள் இருக்கின்றன. உலக மொத்த விளைவில் சோளத்தில் 100க்கு 70 பாகமும், பருத்தியில் 100க்கு 60 பாகமும், புகையிலையில் 100க்கு 50 பாகமும், ஓட்ஸ் என்னும் தானியத்தில் 25 பாகமும், பார்லியில் 13 பாகமும், உருளைக்கிழங்கில் 7 பாகமும், சர்க்கரையில் 5 பாகமும் அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. சுருங்கக் கூறினால் உலகத்திற்கு வேண்டிய உணவுப்பொருள் தானியங்களில் ¼ பங்கு அமெரிக்காவில் விளைகிறது. அமெரிக்காவில் விவசாயத்திற்காக ரூ. 7,05,80,00,000 பெறுமான உரம் உபயோகிக்கப்படுகிறது. விவசாயமே அமெரிக்காவை இவ்வளவு உயர்ந்தநிலைமைக்குக்கொண்டு வந்திருக்கிறது. ரசவாதத்தால் தங்கம் செய்வதுபோன்று அமெரிக்காவில் தங்களுடைய உழைப்பால் விவசாயிகள் செல்வவந்தர்களாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா ஜனாதிபதியைக் காட்டிலும் விவசாய மந்திரிக்குத் தபாலில் கடிதங்கள் அதிகம் வருவதாக ஒருவர் அறிவிக்கிறார்.

## அமெரிக்க விவசாயிகளுக்கு வசதிகள்

தபால், தந்தி, டெலிபோன், ரேடியோ, ரோடு, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, வாசகசாலை, புஸ்தகசாலை, மோட்டார், சமுகச் சங்கம், சத் சங்கம், பாங்கு, சேவிங்ஸ் பாங்கு, விவசாய டாங்கு, கைத்தொழில் பாங்கு, தவணையில் விவசாயக் கருவிகள் கொடுக்கும் ஸ்தாபனம்; விவசாயக்கடன், விதைப் பண்ணை, மாதிரிப் பண்ணை, விவசாயக் கல்வி, சர்க்காரின் ஆராய்ச்சிப் பண்ணை, சர்வகலாசாலையின் ஆராய்ச்சிப் பண்ணை, அற்பவேலையில் அதிக வேலை செய்யும் இயந்திரம், விவசாயப் பத்திரிகை, புஸ்தகம்—அறிக்கை—துண்டுப் பிரசுரங்கள்—பிரசங்கங்கள், கல்வி புகட்டும் விளக்குப்படம், சீர்திருத்தம் உண்டாக்கக்கூடிய சினிமா, சர்க்காரின் பலவகை உதவி ஆக இன்னும் எத்தனை சௌகர்யங்கள் அமெரிக்கக் குடியானவனுக்கு உண்டு. அமெரிக்காவிலுள்ள விவசாயிகளின் உயர்வைப்பற்றியும் விவசாயத்தின் உன்னதத்தைப்



15965

பற்றியும் எவ்வளவுதான் எழுதுவது! சுருக்கமாக இங்கு எவ்வாறுதான் எழுதுவது!! அங்கு எதற்கும் இயந்திரங்கள்; எதற்கும் ஆதரவு. தொழிலைத் தெய்வீகத் தன்மையுடையதென்று போற்றுவதாலல்லவோ வறுமையின் வாயிலிருந்து விலகி வாழ்கிறார்கள். ஒரு வரியில் சொன்னால், உலகிலுள்ள வேறு எத்தேசமேனும் விவசாயத்தில் அமெரிக்காவைப் (U. S. A.) போன்று மகா உன்னதமடைந்து விளங்கவில்லையென்று திட்டமாய்க் கூறுவதற்குக் கொஞ்சமேனும் பயப்படவேண்டியதில்லை.

## இந்திய விவசாயிகளின் தற்கால நிலை

இந்நாட்டு மக்களில் அநேகர் விவசாய விருத்தியில் ஈடுபடாதது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். பொதுவாக ஆங்கிலம் அறிந்தவர்கள் கிருஷித்தொழில் கேவலம் என்று நினைக்கிறார்கள். நமது தேசத்தில் விவசாயத் தொழிலில் மற்ற தொழில்கள் போன்று தற்சமயம் அவ்வளவு இலாபம் கிடைப்பதில்லையென்பது உண்மையாக விருந்தபோதிலும், இதர தொழில்களில் எவ்வளவு உற்சாகத்துடனும் உறுதியுடனும் உழைக்கிறார்களோ, அவ்வளவு உற்சாக-உறுதியுடன் உழைத்தால், எதிர்பாராத அநேக அபிவிருத்திகள் விவசாயத்தில் ஏற்படுவது நிச்சயம். இத்தொழில் இப்பொழுது ஏழைக் குடியானவர்களாலேயே அதிகம் செய்யப்படுகிறது. குடியானவர்களின் குறைவான வாழ்க்கையாலும், இதன் மூலம் இவர்களுக்கு அடிக்கடி நோயுண்டாவதாலும் கொஞ்சங் கொஞ்சம் நிலங்கள் பல இடத்தில் வைத்திருப்பதாலும், புதிய புதிய ஆயுதங்கள், நல்ல விதைகள், சரியான உரங்கள், நோயற்ற பலமான கால் நடைகள் முதலியவைகள் வாங்குவதற்கு வேண்டிய மூலதனம் இல்லாததாலும், குறைந்த வட்டியில் பணம் கிடைக்காததாலும், விளை பொருள்களை விற்பதில் அதிகமான இலாபம் தரகர் போன்ற மத்திய வியாபாரிகளுக்குப் போய்விடுவதாலும், போதிய ஆரம்பக் கல்விகூட இன்மையாலும், வேண்டிய விவசாயக்கல்வி கிடையாததாலும், சந்தையில் நடப்பு



விலை (Market rate) யைத் தெரியாததாலும், சாஸ்திரீய விவசாய சம்பந்தமாகச் செய்யப்படும் புதிய முறையில் நம்பிக்கையில்லாததாலும், விவசாயத்தில் பழைய வழக்கங்களையே அநுசரிப்பதாலும், வழக்கம் என்ற பெயரால், திருவிழா என்ற பெயரால், நல்ல நாள் என்ற பெயரால் யோசிக்காமல் வருமானத்துக்கு மிஞ்சி செலவு செய்வதாலும், சில சமயங்களில் மிராசுதாரர்களின் கொடூரத்தாலும், நீர் வசதியின்மையாலும், வரிப்பளுவாலும், கடனாலும் இந்தியாவில் விவசாயிகள் மிக மிகக் கஷ்டமடைகிறார்கள். விவசாய அபிவிருத்தி ஏற்படுவதற்கும் வழியில்லை.

## தேசீய செல்வம்

உயர்தரக் கல்வி பெற்றவர்களும் ஆராய்ச்சிக்காரர்களும் மிராசுதார்களும் விவசாயத்தில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டு, விவசாயிகளுடன் ஒற்றுழைத்தால்தான் கிருஷித்தொழில் மிகுவிரைவில் சிறப்படையும் என்பது திண்ணம். இந்தியாவிலே விவசாயத்திற்கேற்ற பல்வேறு இயந்திரங்களையும் புதுமாதிரி லாபகரமானமுறைகளையும் கையாண்டால் வெகு சீக்கிரத்தில் தேசம் வளப்பமடையும். தேசமக்கள் உயிர் வாழ்வதற்குக் காரணமாயுள்ள விஷயமாம் விவசர்யம் கவனிக்கப்படாது, இதர விஷயங்களைக் கவனித்தபோதிலும், அவை சிறிதும் பயன்படமாட்டாது. விவசாயமே செல்வத்திற்கு மூலகாரணம். ஆகவே நாட்டு ஐஸ்வர்யத்தை வளர்க்கும் முறையில் பிரவேசிக்காத வரையில் தேசத்தில் யாதொரு நன்மையும் ஏற்படப்போவதில்லை.

## வேண்டுகோள்

பிரிய விவசாயிகளே! ராஜதந்திரத்திலும், சாமர்த்தியத்திலும் நீங்கள் மற்ற வகுப்பாரைக் காட்டிலும் பின்னடைந்தவர்களென்று உலகத்தினர்களுக்குக் காணப்பட்டபோதிலும், நீங்கள் பல விஷயங்களில் தவறுதல்கள் செய்த போதிலும், நீங்கள் உண்மையாளிகள், உழைப்பாளிகள். ஆகையினால்தான் தெய்வப் புல

மைத் திருவள்ளுவனாரும், கவி கம்பனாரும் உங்களை வாழ்த்தி வணக்கம் செலுத்தியிருக்கிறார்கள். நீங்கள் இப்பொழுது வறுமைத் தீயினால் வாட்டப்பட்டு அறியாமை அந்தகாரத்தில் அகப்பட்டுக் கிடக்கிறீர்கள். உலகத்தின் நாலுபக்கங்களிலுள்ள உங்கள் சகோதரர்கள் உங்களைக் கூவிக் கூவி அழைக்கின்றார்கள். இந்தியாவினின்றும் வறுமை துரத்தப்படவேண்டுமானால், விவசாயம் விருத்தியாக வேண்டுமானால், தேசியச் செல்வம் பெருகவேண்டுமானால், கைத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால், வியாபாரம் விசாலிக்க வேண்டுமானால், நாட்டில் சாந்தி நிலவ வேண்டுமானால், இந்தியா உலகத்தால் மதிக்கப்படவேண்டுமானால் விவசாயம் விருத்தி செய்யப்படல்வேண்டும். சோம்பலை ஒழித்து, சுறுசுறுப்புடன் ஓய்வில்லாமல் உழைக்கவேண்டும். ஆருக்கு வந்த விருந்தோ என்று கவனமின்றி விதைகளை நிலத்தில் போட்டுவிட்டால் போதிய அளவு விளையுமா? "உழுவதற்குப் பதிலாகக் கோழி கிண்டுவது போன்று இந்திய விவசாயிகள் நிலத்தைக் கிண்டுகிறார்கள்" என்று செயிண்ட் நிகால் சிங்கின் அமெரிக்க மனைவி கூறுகிறார். சிலர் களைகளை வெட்டுவதில்லை, ஆனால் களைகளைச் சுரண்டுகிறார்கள். "அகல உழுவதைக்காட்டிலும் ஆழ உழு" என்பது நாட்டுப் பழமொழி.

பொன் விளையும்படியான போதிய நிலங்களிருந்தும், நீர்வளம், நிலவளம், மலைவளம் பொருந்திய நாடாயிருந்தும், பலர் பசிப்பிணியை ஆற்ற வழியறியாது பேதைகளாய்ப் பரிதபிப்பது பாரத நாட்டினருக்கு அழகா, அடுக்குமா? விவசாயம் வளர்ந்து வந்தாலன்றோ, வறுமையகன்று நாட்டுத்தொழில்கள் நன்கு வளரும். மேலை நாட்டாரைக் கவனியுங்கள். அவர்கள் மூளையை உபயோகித்து, மக்கள் மூக்கில் விரல் வைத்து எண்ணும்படியான மலைக்கத்தக்கான கருமங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆங்கில நாடுகளில் அதிகமாகப் பயிர்த்தொழில் இல்லையெனினும், தொழில் ஒன்றினால் மட்டும் வறுமையற்றவர்களாய் — உலகம் மெச்சும் செல்வச் சீமான்களாய் வாழ்கிறார்கள். பிழைக்க வழி தெரியாது,



உத்தியோக வேட்டையில் நுழைந்து அடிமைத் தொழிலுக்குச் சென்றால், பத்தோ நூறோ கிடைக்கும். இவர்களுக்குக் கடைசியில் மீதம் கடனே. இவ்வாறு கஷ்டப்படும் இவர்கள் விவசாயத்தில் இறங்கி உழைத்தால், தாங்களும் நன்மை அடைவதன்றி, சுதந்திர வாழ்வு நடத்தினவர்களாகித் தேசத்திற்கும் பெருந்த தொண்டு செய்தவர்களாவார்கள். நாட்டிற்கு முதுகெலும்புபோன்றிருக்கும் விவசாயிகளே, விழித்தெழுங்கள்! புத்தம் புதிய முறைகளை அனுசரியுங்கள்.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

# இலங்கையில் கிருஷி அபிவிருத்தி

ஒரு தேசத்தின் செல்வம் அத்தேசத்தின் விவசாய விருத்தியைப் பொறுத்தே இருக்கின்றது. நாட்டிற்கு நானாவித நன்மைகள் நல்கவேண்டியது கிருஷியே. மனிதர்களுக்கு அத்யாவஸ்யமாக வேண்டியது மூன்று:— ஊண், உடை, இருப்பிடம். உடையும் உறைவிடமும் இல்லாமலிருந்தாலும் உண்பதற்கில்லாவிட்டால் மக்கள் வாழவே முடியாது. இங்கிலாந்து அதிகமாகச் சரக்குகளை உற்பத்திசெய்து, அதனால் அதிக ஐஸ்வரியம் படைத்த தேசமாயிருப்பினும் அந்நாட்டின் சீதோஷ்ண நிலைமையானது ஏராளமான தானிய வகைகளை உண்டாக்கப் பொருத்தமற்றதாயிருப்பதால், வேற்று நாடுகளிலிருந்தே அங்கு உணவுப்பொருள்கள் வரவழைக்கப்படுகின்றன. சிலகாலம் அங்கு உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படாவிட்டால், இங்கிலாந்தின் நிலை என்னாகும்? பிரிட்டானியர்கள் நிலக்கரியைச் சாப்பிடுவார்களா? இரும்பைத் தின்னுவார்களா?

மூலப்பொருள்கள் நிறைந்தது நமது பாதகண்டம். எத்தனையோ அரும்பெரும்பொருள்கள் அறிவாறன்று அப்படியே அடங்கிக் கிடக்கின்றன. இதனாலன்றோ அநேக நாட்டார்கள் இந்தியாவை எதிர்நோக்கி நிற்கிறார்கள். இந்தியாவில் விவசாயச் சீர்திருத்தம் எவ்வாறு செய்யப்படல் வேண்டும் என்பதைப்பற்றி விசாரித்து யோசனை கூறுமாறு ஒரு விவசாயக் கமிஷன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு, கமிஷனர்களும் தேசத்தின் பல பக்கங்களுக்கும் பல லட்சம் ரூபாய் செலவில் சென்றுவிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் எதற்கும் கமிஷன் வேண்டும். அதற்குச் செலவிற்குப் பணமும் கொடுத்ததாக வேண்டும்.



## இலங்கை

இலங்கைத்தீவு இந்தியாவிற்குத் தென் கிழக்கில் இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கும் சிறு சிறு சில தீவுகளைச் சேர்த்து அதன் விஸ்தீரணம் 25,432 சதுர மைல் அல்லது அயர்லாண்டு (Ireland) தீவைக் காட்டிலும் ¾ பங்கிற்குச் சற்று பெரிது. வடக்கிலிருந்து தெற்குவரைக்கும் அதன் நெடுநீளம் 270 மைல்; அதன் அகண்ட அகலம் 140 மைல். 1921௵ ஜனசங்கைப்படி கப்பல் ஜனங்களும், பட்டாளக்காரர்களும் உட்பட 45,04,549. ஏறக்குறைய 5ல் ஒரு பாகமே கிருஷி செய்யப்படுகிறது. நெல் 850,000 ஏக்கரிலும், மற்ற தானியங்கள் 120.000 ஏக்கரிலும், ரப்பர் 390.000 ஏக்கரிலும், கறுவாப்பட்டை 25,000 ஏக்கரிலும், கோகோ 33,200 ஏக்கரிலும், புகையிலை 13,000 ஏக்கரிலும் 1922௵த்தில் பயிரிடப்பட்டது.

இலங்கை இங்கிலாந்தின் ஆட்சியில் இருக்கிறது. இந்தியாவைக்காட்டிலும் இங்கு பல வசதிகள் அதிகம். இயற்கை வளங்களும், வனப்புகளும் வாய்ந்த சிங்காரச் சிலோனிவில் இப்பொழுது விவசாய அபிவிர்த்தி ஏற்பட்டிருக்கிறது. இலங்கை விவசாய டைரெக்டருடைய (The Hon Mr Stockdale) மேலான யோசனையின்பேரில் விவசாய விருத்திக்காக வருஷத்தில் 10 லட்சம் ரூபாய் செலவு செய்து அநேக விவசாய காரியங்களைச் செய்யப்போகிறார்கள்.

## திட்டங்கள்

இலங்கைத் தீவை 6 பாகங்களாக வகுத்துப் பல காரியங்கள் செய்வது. ஒவ்வொரு பிரிவிலும் பரீட்சைத் தோட்டம், விதைத்

தானிய விவசாயம் முதலிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவது ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் படிப்பதற்காக விவசாயப் பாடப் புஸ்தகங்களை எழுவித்துப் பல இடங்களில் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பது. விவசாய சம்பந்தமான சில நூல்களைத் தேச பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதுடன் விவசாயப் பத்திரிகைகள் மூலம் ஜனங்களுக்கு விவசாய அறிவை விருத்தியாக்குவது. டிரினிடாட் (Trinidad) பிரிட்டிஷ் கயானா முதலிய தேசங்களில் தானியங்களை விற்பனை செய்யும் நல்ல முறைகளை அறிந்து, இலங்கை விவசாயிகள் விளைவிக்கும் விளைபொருள்களை விற்றுக்கொடுக்கும் விஷயத்திலும் வேண்டியவைகளைச் செய்வது. பழக்கிருஷியை உற்சாகிப்பது. கால் நடைகளை நல்ல முறையாய் வளர்த்துக் காட்டுவது.

முழு இலங்கைக்கும் பேராதனையிலேயே (Peradeniya) விவசாய இலாகாவின் மத்திய ஸ்தாபனம் இருக்கிறது. இங்குதான் நூதன ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. திருத்தமான முறையாய் ஆடு மாடுகள் வளர்த்தலைப்பற்றிய பரிசோதனைகள் எல்லாப் பகுதிகளிலும் நடக்கின்றன.

ஐக்கிய நாணயச் சங்கங்களைக் கிருஷி இலாகாவிலிருந்து பிரித்து, அதற்குப் பிரத்தியேகமாக ஒரு இலாகாவை ஏற்படுத்த அரசாங்கத்தார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். விவசாய டிபார்ட்மெண்டில் வேலைகள் அதிகரித்துவிட்டதால், உபதலைவர் ஒருவரை நியமிக்கச் சர்க்காருக்கு யோசனை உண்டு,

அந்நாட்டில் கமிஷன் இல்லாமலே இச்சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எழ்மை இந்தியாவிலோ?

பி. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

---



# ஏல விவசாயத்தைப்பற்றிய ஓர் குறிப்பு.

எழுதியது:—

L. P. மாஸ்காரன் ஹாஸ்,

ஜில்லா பாரஸ்டு ஆபீசர், ஹாஸன் ஜில்லா.

ஏலம் இந்தியாவின் மேற்கிலும், தெற்கிலும் தானாக உண்டாகும் ஓர் பயிர். கன்னடம், மைசூர், திருவாங்கூர் முதலிய இடங்களிலுள்ள ஈரம் மாறாத செழித்த மலைப் பிரதேசங்களில் இது ஏராளமாகக் காணப்படுகிறது. ஒரு வருஷத்திற்கு மேல் ஜீவித்திருக்கும் பூண்டுகளில் இது ஒன்று. முழு வளர்ச்சியடைந்த செழிப்பான செடியின் உயரம் ஆறு அடிக்கு மேல் இருக்கும். இலைகள் நீளமான காம்புகளையுடையதாய் அகலமில்லாமல் ஈட்டியைப்போல் நீண்டிருக்கும். இவைகள் இஞ்சியைப்போல் கிழங்கிலிருந்தே வளர்கின்றன. புஷ்பங்கள், கிழங்கிலிருந்து தோன்றும் இலைகளில்லாத சரங்களில் காணப்படுகின்றன. சரங்கள் தரைக்குமேல் படர்ந்து வளரும். வியாபாரச் சரக்காகக் கருதப்படும் முக்கோண வடிவுள்ள இதன் பழம் மூன்று அறைகளையுடையது. மெதுவான இதன் வெளிரிய மஞ்சள் நிறத் தொலிக்குள் மூலைகளையுடைய அநேக கருப்பான விதைகள் இருக்கும். இவ்விதைகளுக்கு இனிய வாசனையோடு கூடியதுமான உருசியும், சுகந்த வாசனையும் உண்டு. இதன் கிழங்கு வருஷத்திற்கு வருஷம் வளர்ந்துகொண்டு வருவதால் பெரிய செடியில் புதிய செடியைக் காட்டிலும் அதிக சரங்களும் இலைகளும் இருக்கும். வருஷா

வருஷம் இலை முதலியவைகள் பட்டு விழுந்துவிடவே புதிய குருத்துக்கள் தோன்றும். இச்செடி பிரிக்கப்பட்ட கிழங்குகளிலிருந்தும் விதைகளிலிருந்தும் விர்த்தி செய்யப்படுகிறது.

## மன்ஜராபாத் தோட்டங்களும், அதன் மண்ணும்.

மன்ஜராபாத் தாலுகாவின் மலைத்தொடர்கள் ஏலக்கிருஷிக்கு மிகவும் ஏற்ற இடம். மர வியாபாரத்திற்கு இடமில்லாததால் இங்கு இதற்காக ஒரு வேலையும் செய்ய முடியாது. நாற்றுக்கள் செழித்து வளர்வதற்கு வேண்டிய வெளிச்சம் கிடைக்கும்படி சிறு கிளைகளை வெட்டி காட்டை அழிப்பதும் அனுசரிக்கப்படுகிறது. இங்கு பாக்கிற்கும், மிளகிற்கும் ஏற்றதாயிருக்கும் மண்ணில்-தகுதியாக்கிவைக்கப்பட்டிருக்குமிடத்தில்,முறையாக பாத்திகளில் தனியாய் வளர்க்கப்பட்டிருக்கும் ஏல நாற்றுக்களை நடுவது நன்கு வளரயேதுவாயிருக்கிறது. ஆனால் ஈரம் மாறாத குளிர்ந்த வசதியான மண் கண்டம் அதற்கு அதிக விசேஷம். பயிரிடும் இடங்களில் தண்ணீர் பாய்ச்சுவற்கு வேண்டிய சாதனங்கள் இருந்தால் மட்டும் தண்ணீர் பாய்ச்சப்படும்; இல்லாவிட்டால் களையெடுப்பதைத் தவிர வேறு வேலை செய்வதில்லை. சரியாய் விவசாயம் செய்வதற்கு வேண்டிய முக்கிய சாதனங்கள் :—

(a) அளரற்ற எக்காலமும் ஈரம் மட்டுமுள்ள வசதியான மணல் கலந்த களிமண் நிலம்.

(b) தோட்டங்கள் இயற்கையாகவே அதிக காற்றடி படாமல் இருப்பதுடன் வேண்டியபோது நிழலுக்கு மரங்கள் உண்டு பண்ணக்கூடியதுமாயிருக்கவேண்டும்.

## விவசாயம்.

கிழங்கிலிருந்து செடி உற்பத்தி செய்வதாயிருந்தால், கிழங்கைப் பிரித்து அவற்றோடு இருக்கும் இலைகளுடன் குழிகளில் நடப்படும். குழிகளை 18 அங்குல சம சதுர—ஆழமுள்ளதாக



வெட்டி இலை உரங்கலந்து வெட்டின மண்ணால் மூட வேண்டும். கிழங்குகளை எவ்வித முகாந்திரத்தைக் கொண்டும் ஆழத்தில் நட்டுவிடாமல் இலேசாய் மண் போட்டு மூடவேண்டும். மன்ஜராபாத்தில் விசேஷமாய்ப் பயிரை விதையிலிருந்துதான் உண்டுபண்ணப்படுகிறது. ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்களில் ஒரே அளவுள்ள பெரிய பழங்களைச் சேகரித்து அவற்றின் மிருதுவான தொலியைக் கையால் உரித்து விதைகளைச் சாம்பலுடன் கலப்பார்கள். இவ்விதம் நாலாபக்கமும் சாம்பலால் மூடப்பட்ட விதைகள் பின்பு நிழலில் நன்றாய் உலர்த்தப்படும். 8 அடி நீளமும் 4 அடி அகலமுமுள்ள சற்றுயர்ந்த அநேக நாற்றங்கால் பாத்திகளைத் தயார் செய்து சிறந்த மெதுவான பொடி மண்ணை உரம் போடுவார்கள். உரம் நாள்சென்றதாயும், மக்கியதாயும், பொடியாகக்கூடியதாயும் இருக்கவேண்டும். இவ்வித உரத்தை மேல்மண்ணுடன் சரியாய்க் கலப்பதால் சிறிய விதைகள் முளைப்பதற்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். இலை உரமே இதற்கு விசேஷம். விதைகள் சிறியவை; உலர்ந்த விதைகளை நிரந்து விதைப்பதற்காகவே அவற்றுடன் முன் கூடியே சாம்பல் தூளைக் கலந்துகொள்வார்கள். விதைத்ததும் அவைகளை இலேசாய் மூடவேண்டும். எட்டடிக்கும் நாலடிக்குமுள்ள ஒரு பாத்திக்கு இரண்டு தோலா விதை வேண்டும். விதைப்பதற்கு முன்பு விதைகளைத் துணியிலாவது கம்பளியிலாவது முளை கட்டி வைத்திருந்து விதைத்தால் பயிர் அதி சீக்கிரமாக முளைக்கும். விதைகள் பொருமியவுடன் அவைகளைப் பாத்திக்கு மேல் உதிரி புழுதிமண்ணைத் தூவவேண்டும். சாதாரணமாய் விதைத்தால் முளைப்பதற்கு அதிகநாள் அநேகமாய் ஒருமாதம் பிடிக்கும். ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்கள விதை பாவுங் காலமாகும். நாற்றங்காலுக்கு, வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்புத் தேவை. 4 அல்லது 5 அடி உயரத்தில் கொப்புகளைக்கொண்டு பந்தல்போடவேண்டும். பந்தலிட்டுப் பாதுகாத்து வரும் பாத்தியிலுள்ள நாற்றுக்கள் பெரிதாகும் வரைக் கத்திரிப்பது விசேஷம். பாத்திகளைக் குழை கொம்புகளைக்கொண்டு தரை மட்டத்திலே மூடுவதாலும் போதுமான அளவு மழையினின்றும் காப்பாற்றலாம். நாற்றங்

கால் பாத்திகள் இயற்கையிலேயே பாதுகாப்பு இல்லாததாய் இருந்தால் இம்முறையே கையாளப்படுகிறது. நெல்லி இலையும் கொப்புமே அதிக சிலாக்கியம். விவசாயிகள் இம்மரமும், இதைப் போல் அங்கு காணப்படும் மற்ற மரங்களின் குழை கொப்புகள் தான் பயிரைப் பூச்சி, புழுக்களிலிருந்து காப்பாற்றுவதாக நிச்சயமாய் நம்புகிறார்கள். இம்மரங்களின் இலை, காய், பட்டை முதலியவற்றிலிருந்து ஆசிட், கயாகுங்கிலியம், மர எண்ணைகள் இவைகள் இருப்பதால் அவைகள் பூச்சி புழுக்களுக்கு ஆகாத பாஷாணமாயிருக்கலாம்; அதனால் அக்குழை கொப்புகளால் மூடப்பட்டிருக்கும் இள நாற்றுக்கள் பூச்சிகளிலிருந்து காப்பாற்றப்படலாம்.

நாற்றுக்கள் நெருக்கமாய் இருந்தால் அவற்றைக் கலைக்கவேண்டும். மிகுந்திருக்கும் பயிர்கள் பாத்தியில் 4 அல்லது 5 மாதம்வரையில் இருக்கவேண்டும். அப்பொழுது பாத்திகள் உலர்ந்து போகாதபடி இருக்கவேண்டியதாகையால் ஜல வசதி அவசியம். நாற்றை முதல்தரம் பிடுங்கி நட, சிலசமயம் பக்கத்திலுள்ள நெல் நாற்றங்கால்களை உபயோகிக்கிறார்கள். நாற்றங்காலுக்காக வயல் நெடுக 2 முதல் 2½ அடிக்கு ஒன்றாகக் கால்வாய்கள் நெடுகத் தோண்டி மண்ணை மத்தியிலுள்ள காலியிடத்தில் போடுவார்கள். இவ்வாறு மட்டமான கரைகளும், சிறு கால்வாய்களும் மாறி மாறி இருக்கும். கரைகளில் 9 முதல் 12 அங்குலத்திற்கு ஒன்றாக 2 வரிசைகளில் பயிரை நட்டு மேலே 4 அடி உயரத்தில் மூங்கில் முதலியவற்றால் பந்தல் போட்டு அதை நிழலுக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஓலையால் வேய்வார்கள். சாதாரண காலத்தில் ஜலம் எல்லாக் கால்வாய்களிலிருநதும் ஒரே அளவாகக் கசியும்படி நீர் பாய்ச்சப்படும். கரைகள் எப்பொழுதும் ஈரமாகவே இருக்கவேண்டும். ஆனால், நனைந்து கசிந்துகொண்டிருக்கக் கூடாது. கார் காலத்தில் பாய்ச்சுவதற்கு ஏற்பட்ட ஜலத்தையும், வடிகால் ஜலத்தையும் கூடியவரையில் நாற்றங்காலைவிட்டு அப்புறப்படுத்த வேண்டும். பயிர் 15 முதல் 18 மாதம் வரை நாற்றங்காலில் இருக்கும். அவைகள் அப்பொழுது சுமார் 4 அடி உயரமிருக்கும்.



## நடுதல்.

ஏலச்செடிகளை சாஸ்வதமாய் தோட்டத்தில் நடுவதற்கு இரண்டு காலங்கள் உண்டு:—ஒன்று மார்ச்சு மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை; மற்றொன்று செப்டெம்பரிலிருந்து அக்டோபர் வரை. நாற்றங்காலில் வளர்த்த நாற்றுக்களை 4 முதல் 6 அடிக்கு ஒன்றாக நிழல்கட்டான மரங்களுக்கிடையில் நடுவார்கள். 18 அங்குல சம சதுர ஆழத்தில் குழிகள் தோண்டி, தோண்டிய மண்ணோடு இலை உரத்தைக் கலந்து குழிகளை மூடி, நாற்றை நட்டு அதற்குமேல் தரைமட்டம்வரை உரத்தால் மூடுவார்கள். ஆனால் கிழங்குகளை ஆழத்தில் வைத்துவிடக்கூடாது. ஒவ்வொரு செடிக்கும் பக்கத்திலும் ஒரு வலுவான குச்சியைச் சரியாய் நட்டு அதோடு வாழை நாரைக்கொண்டு தண்டுகளை இரண்டொரு கட்டுகள் கட்டுவார்கள். இவ்வாறு செய்யாவிட்டால் இலைகள் காற்றாலும் மழையாலும் சேதப்படும். ஒவ்வொரு தூரைச் சுற்றிலும் மண்ணை வெட்டி, களையெடுத்துவிட வேண்டும். உரம் ஏராளமாயிருந்தால் ஒவ்வொரு செடிக்கும் வருஷத்திற்கு ஒரு முறை மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் இலை உரம் வைப்பார்கள்; இலை உரம் குறைவாயிருந்தால் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை உரம் வைக்கப்படும்.

## பலன்.

ஏலச்செடி 3 அல்லது 4 வருஷக் கடைசியில் காய்க்க ஆரம்பித்து, 5-வது அல்லது 6-வது ஆண்டில் நல்ல பலன் கொடுக்கும். மூன்றாவது வருஷத்தில் இலை உதிர்கால வசுவா சங்கிராந்தியை அதாவது செப்டெம்பர்மீ ஏறக்குறைய 23-உ அடுத்துப் பலன் பிடிக்கும். ஏப்ரல், மே மாதங்களில் பூத்து ஜூன், ஜூலை மாதங்களில் பிஞ்சுகள் திரளும். அவற்றைக் குழை குச்சிகளால் இலகுவாய் மூடி அதிக மழையினின்றும் காப்பாற்ற வேண்டும். செடி 10 வருஷம் வரை காய்க்கும். பின்பு அது தளர்ந்து போகவும் புதிய நாற்றையாவது தட்டையையாவது நடவேண்டும். காய்கள் பழுக்குங்காலம் மாறுபடும்; ஆனால் செப்டெம்பர் அக்டோபர் மாத

ங்களிலேயே அநேகமாய்ப் பழுக்கின்றன. சாத்திலுள்ள காய்களைப் பழுக்கப் பழுக்க எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். பழுக்கும்பொழுது பச்சையாய் இருக்கும் காய்கள் உருண்டு திரண்டு பஞ்சள் நிறமாக மாறும். அப்பொழுது எடுக்காமல், நன்றாய்ப் பழுக்க விட்டுவிட்டால் பழம் கீறி விதைகள் சிந்திவிடும். பழங்கள் சாத்திலிருந்து பிடுங்கப்படாமல் காம்பின் ஒரு பகுதி பழத்தோடு இருக்கும்படி ஆயப்படவேண்டும். பிடுங்குவதால் பழம் விரல்களால் நசுக்குண்டு சேதப்படலாம். சேகரித்தபின் பழங்களை நான்கு கம்புகளில் கட்டப்பட்டிருக்கும் பாயின்மேல் பரப்பி நான்கு நாள்வரை வெயிலில் உலர்த்துவார்கள். இதனை இராக்காலங்களில் வீட்டுக்குள் எடுத்துக்கொண்டு போகப்படும். வெயிலில்லாத மோட காலத்தில் பழத்தை உலர்த்துவதற்காக ஏற்படுத்தியுள்ள அடுப்பின்மேல் பரப்புவார்கள். இது சரியான முறையல்ல. இதனால் பழம் முழுதும் உலர்ந்தவுடன் கருத்து விலை பெரிதும் குறைந்துவிடுகிறது. பின்பு பழத்தின் நுனியிலிருக்கும் காய்ந்த களிமண்ணை நீக்கும் பொருட்டு வெயிலில் போட்டு கையால் தேய்ப்பார்கள். பழம் நிதானமாய் உலர்த்தப்படவேண்டும். அதிகமான வெயில் காய்ச்சலால் பழம் வாய்விட்டு சரக்கு மிகுதியாகக் கெட்டுவிடுகிறது. உலர்ந்தபின் பழம் நிறுவையிலும் அளவிலும் மிகவும் குறைந்துவிடும். வெயிலில் உலர்த்துவதால் பழம் சிறிது வெளுத்துவிடும். நன்றாய் உலர்ந்தபின் வியாபாரிகளுக்கு விற்கப்படும். 28 ராத்தல்கொண்ட மணு ஒன்று ரூ. 40 முதல் 100வரையில் விற்கும்.

நிறைந்த தோட்டத்தில் ஏக்கருக்கு 1200 முதல் 1400 செடிவரை இருக்கும். நன்றாய் செழித்து வளர்ந்த ஒரு ஏலச்செடியிலிருந்து ½ ராத்தல் சரக்கு எடுக்கலாம்.

## இடைஞ்சல்கள்.

செடிகளுக்கு நோய்களும் புழுக்களும் தீங்கிழைப்பதுடன் பழத்தை பாம்பு, எலி முதலிய ஊர்வனவும் தின்று நாசமாக்குகின்றன.



## பாடம் பண்ணல்.

வியாபாரிகள் ஏலத்தை விற்பனைக்காகப் பாடம்பண்ணிப் பலரகமாய்ப் பிரித்து வேண்டியபடி சிப்பம் கட்டுகிறார்கள். தென் மராட்டா ரயில்வேயைச் சேர்ந்த ஹாவேரி (டார்வார் ஜில்லா) என்னும் இடத்திலுள்ள ஓர் கிணற்று ஜலம் ஏலக்காயைப் பாடம் பண்ணி வாசனையை அதிகப்படுத்தும் தனிச்சிறப்பு உடையதாகக் கருதப்படுகிறது. மன்ஜாராபாத் தாலூகாவில் விளையும் எல்லா ஏலச்சரக்கும் தற்போது சக்லஸ்பூரிலுள்ள மூன்று ஏலச்சரக்குக் கம்பெனிகள் மூலம் ஹஸ்ஸானிலிருந்து ஹாவேரிக்கு அனுப்பப்படுகிறது. 1922—23ம் வருஷத்தில் இத்தாலூகாவின் ஏலச்சரக்கு விளைவு 16,000 மணு என்றும், 1923—24ம் வருஷத்தின் விளைவு அதற்கு முந்தின வருஷ விளைச்சலைக்காட்டிலும் 2,000 மணு குறைச்சல் என்றும் கணக்கிடுகிறார்கள்.

## நாற்றங்கால் செலவு நடவு ஏக்கர்வீத வரவு முதலியவைகள்.

(1) நாற்றங்கால் ஏற்படுத்துஞ் செலவு:—ஏலத்தின் நாற்றங்கால் பாத்திகள் சாதாரணமாய் 12 அடி நீளமும் 3 அடி அகலமும் உள்ளதாயிருக்கும். ஒரு சேர் பழத்திலுள்ள விதையை எடுத்துச் சாம்பலுடன் கலந்தால் ½ சேர் இருக்கும். இந்த விதைகளை மூன்று பாத்திகளுக்குப் போதுமானது. மூன்று பாத்திகளிலிருந்து அல்லது ½ சேர் விதையிலிருந்து சம்பவங்களினால் பட்டுப்போன நாற்றுகளுக்குப் புதிதாய்ப் போட்டது போக ஏறக்குறைய ஒரு ஏக்கரில் நடுவதற்குப் போதுமானதாய் 1,200 முதல் 1,400 நாற்றுக்கள்வரை உண்டாகும். ஆகையால் ஒரு ஏக்கரின் விதைச் செலவு ரூ. 1—8—0 ஆகும். நாள் ஒன்றுக்கு 8 அணா வாங்கும் ஓர் கூலி 3 பாத்திகளைத் தயார்செய்து, விதைத்துப் படுகை மண்தூவி அதற்குமேல் வைக்கோலையும் பரப்பிவிடுவான். 3 பாத்திக்கும் கட்டு 1-க்கு ஒரு அணா விலையுள்ள 15 கட்டு வைக்கோல் வேண்டும். இப்பொழுது பாத்திக்கு மேல் வேய்வதைக் கவனிப்போம்.

பாத்தியை வேய்வதற்கு மொத்தத்தில் ரூ. 25ம், வேலி போடுவதற்கு ரூ. 10ம் செல்லும். பாத்திகளுக்கு டிசம்பர் முதல் மே மாதம் வரை தண்ணீர் விட்டுக் களை யெடுப்பது அடுத்த காரியம். இதற்காக 6 மாதத்திற்கு ஒரு கூலியாள் வேண்டும்.

(2) நடுகை:—தேவையான காட்டை முதலாவது வெட்டிச் சீர்திருத்தம் செய்யவேண்டும். இதற்கு அங்குள்ள விவசாயிகளின் அநுபவப்படி 1 ஏக்கருக்குச் சராசரி ரூ. 15 பிடிக்கும். பின்பு குழி தோண்டும் வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும். 1000 கனஅடி குழி தோண்டுவதற்கு ரூ. 8 கண்டிராக்டு விடுவது வழக்கம். பின்பு நாற்றை நட்டுக் குழிகளை மண்ணையும் மக்கிய எருவையும் கொண்டு மூடுவதற்கு இன்னும் ரூ. 8 பிடிக்கும். தவிரவும் நட்ட நாற்றைச் சுற்றிமட்டுமல்லாமல் முழு ஏக்கரையும் வெட்டு வைத்துக் களை யெடுக்கவேண்டும். இது சாதாரணமாய் ஜூலை மாதத்தில் செய்யப்படும். முதல்தரம் இவ்வாறு செய்ய ஏக்கருக்கு ரூ. 10 செல்லும். அக்டோபர் மாதம் இரண்டாந்தரம் வெட்டு வைக்க ரூ. 10 வேண்டும். பின்பு செடி காய்க்கும்வரைக் களை யெடுப்பதைக் கவனிக்கவேண்டும். நாற்றைச்சுற்றிக் களை யெடுக்க 6 பைசா கூலி கொடுக்கப்படுகிறது.

(3) காவல்:—10 ஏக்கருக்கு மாதத்திற்கு ரூ. 10 சம்பளமுள்ள ஒரு ஆள் தேவை.

(4) கிஸ்தி:—ஏலம் ஏக்கர் ஒன்றுக்குத் தீர்வை ரூ. 1—8—0 இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(5) பழம் எடுப்பும் உலர்த்தும் செலவுகளும்:—இதற்கு ஏக்கருக்குச் சரியாய் ரூ. 5 கொடுக்கப்படுகிறது.

ஏல விவசாயத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ஏற்படும் உத்தேசச் செலவு.

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1. | பாத்தி கட்டுதல் (1 கூலி ஆளுக்கு) | | 0 | 8 | 0 |
| 2. | விதைக்கிரயம் (3 பாத்திக்கு) | ... | 1 | 8 | 0 |
| 3. | வைக்கோல் விலை | ... | 0 | 1 | 0 |



| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 4. | வேய்வதற்கு | ... | 1 | 8 | 0 |
| 5. | வேலிக்கு | ... | 0 | 10 | 0 |
| 6. | பாத்திகளுக்குத் தண்ணீர் அடித்துக் களை யெடுக்க மாதம் 12 ரூ. வீதம் 6 மாதத்திற்கு 1 ஆளுக்கு | ... | 72 | 0 | 0 |
| 7. | காடு வெட்டு | ... | 15 | 0 | 0 |
| 8. | குழிவெட்டு | ... | 12 | 0 | 0 |
| 9. | நாற்றை நட்டு குழி மூடுவதற்கு | ... | 12 | 0 | 0 |
| 10. | ரூ. 10 வீதம் வருஷத்திற்கு 2 தரம் வெட்டு வைப்பதற்கு | ... | 20 | 0 | 0 |
| 11. | களை யெடுப்பு | ... | 7 | 8 | 0 |
| 12. | காவல் | .... | 12 | 0 | 0 |
| 13. | கிஸ்தி | ... | 1 | 8 | 0 |
| 14. | பழம் எடுத்து உலர்த்துவதற்கு | ... | 5 | 0 | 0 |
| | ஆக மொத்தம் ரூ. | ... | 161—3—0 | | |

மேலே காணப்படும் கணக்கு ஒரு வருஷத்து ஜூலை மாத முதல் அடுத்த வருஷத்து ஜூலை மாதவரை ஆகும் ஒரு வருஷத்துச் செலவு. ஆனால் பலன் கிடைக்க 3 வருஷம் பிடிக்கும் ஆதலால் மற்ற 2 வருஷத்திற்கும் ரூ. 100 செலவாகும்.

## வருமானம்.

சாதாரண செழிப்புள்ள 1 ஏக்கரில் 6 மணு சரக்குக் கிடைக்கும். தற்சமயம் 1 மணு ஏலத்தின் விலை ரூ. 70லிருந்து 100 வரை விற்கிறது. மணு 70 ரூ. விலையாக 6 மணுவுக்கு விலை 420 ரூ. ஆகிறது. இதிலிருந்து மேலே குறித்த 1 ஏக்கருக்குச் செலவாகும் ரூ. 261—3—0யும் முதலுக்கேற்பட்ட 100-க்கு 8 வீதம் வட்டியையும் நீக்கிவிட்டுப்பார்த்தால் ஏக்கர் 1-க்கு ரூ. 100 மிச்சமாகும்.

மைசூர் பொருளாதாரப் பத்திரிகை.

# ‘ஏல விவசாயி’யும் ஏல விவசாயிகளின் கடமையும்

“ஏல விவசாயி” ஏல விவசாயச் சங்கத்தின் சரியான பாதுகாப்பினால், மேலான சம்ரட்சணையினால், யாதொரு விக்கினமுமின்றித் தனது முதல் வருடத்தைக் கண்யமாய்ப் பூர்த்தி செய்துகொண்டு இவ்வாண்டிலும் தன்னிரண்டாம் மடலினினிய செழுமைக்கறிகுறியான ஒரு மூன்று இலைகளுடன் வெளிக்கிளம்பி விளங்குகிறது. யாவற்றிலும் வியாபித்து விளங்காநின்ற நம் இறைவன் ‘ஏல விவசாயி’க்கு நிறைந்த ஆயுளையும் குறைவற்ற கல்விக் கேள்விகளையும் ஈந்து ரட்சிப்பானாக.

சகோதரர்களே! ‘ஏல விவசாயி’ என்ற ஒரு பத்திரிகை நமக்கிடையில் உலாவவேண்டுமென்ற நினைப்பைத் தமது சுற்றுப் புறங்களில் விதைத்துப் பயிராக்கிய மேதாவிகளுக்கு நமது வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பின்னும் அது ஆவசிகந்தான் என்று உடனே நினைப்புலகத்திலிருந்து வெளியுலகத்திற்கு நடமாட இடங்கொடுத்த நமது சங்கத் தலைவர்களுக்கும் அநேக வந்தனங்கள் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதுமட்டுமோ, சுற்றுப் புறங்களில் ஏல விவசாய விஷயங்களை எடுத்துக் காட்டக்கூடிய கிரந்தங்களும், பத்திரிகைகளும், பிரசாரகங்களும், போதனைகளும் இல்லாத இந்த ஒரு தனிப்பட்ட கிருஷி விஷயத்தைச் சிரத்தையையும், சிரமத்தையும் எதிர்பாராது, இந்த அபாரமான பெரிய வேலையை ஏற்று இனிதே எடுத்து ‘சங்கத்தின் ஆணையைத் தலைமேல் கொண்டேன்’ என்று விடா முயற்சியுடன் உழைத்து வரும் ‘ஏல விவசாயி’யின் ஆசிரியருக்கும் நாம் நமது வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு ஆண்டு பூர்த்தியானது — அதில் நடந்தேறிய விஷயங்களென்னென்ன? இனி நாம் செய்யவேண்டியதென்ன? ஆகிய விஷயங்களை எடுத்தாராய்வோம். இவ்வோராண்டளவில்:—



1. (ஏ) சங்கத்தின் ஒற்றுமையைப்பற்றி அடிக்கடி தூண்டிக்கொண்டிருக்கிறது.

   (பி) கூட்டுறவுச் சங்கங்களை மேற்கோள்களாக ஆங்காங்கே எடுத்துக்காட்டி அவைகளினால் சாதித்ததை விவரித்துக்காட்டியிருக்கிறது.

2. உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள ஏல விவசாயத்தைப்பற்றிக் கூடுமானவரையில் எவ்வளவு விஸ்தீரணத்தில் எவ்விதம் கிருஷி செய்யப்படுகிறதென்பதை எடுத்துக் காட்டத் தொடங்கியிருக்கிறது.

3. சங்கத்தினின்றும் அவ்வப்போது வெளியாகும் விஷயங்களைப் பத்திரிகையின் மூலமாக விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிறது.

4. கௌரவமிக்க நந்தலைவர்களின் தொண்டின் திறமறிந்து வாழ்த்து மாலை சூட்டி ஜன சமூக சேவையின்பேரில் அநேகருக்கு ஆசையை எழுப்பிவிட்டிருக்கிறது.

5. அரசாங்கத்தாரிடமிருந்து நாம் பெறவேண்டிய பயன்களென்னென்ன? அவைகளை எப்படிப் பெறுகிறது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது.

6. நமது காருண்ய மலையான சர்க்காரின சார்பாக ஸ்ரீ மூலம் ப்ரஜா சபையில் திவான்ஜீயவர்களின் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

7. இதுவுமன்றி விவசாயத்திற்கு உற்ற துணையான கைத்தொழிலைப் பற்றியும் ஆங்காங்கே எடுத்து வெளியிட்டிருக்கிறது.

ஏல விவசாயி தனது வேலையைச் செய்துவருகிறது. மேலும் மேலும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் ஏல விவசாய உலகத்திற்குத் தொண்டு புரியக் கங்கணங்கட்டி நிற்கிறது. சகோதரர்களே, நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? உங்களுடைய பெயரால், உங்களுடைய சார்பால் உங்களின் மேலான தலைவர்கள் ‘ஏல விவசாயி’ என்ற பத்திரிகையை வெளியே கொணர்ந்தார்கள். அதில் உங்களிலொருவர் எடுத்து நடத்தத் துணியவும்

துணிந்தார். பின்னும் துணிந்து நிற்கிறார். நீங்கள் செய்ய வேண்டிய தென்ன? ஏல விவசாயிக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமை என்ன பாக்கியிருக்கிறது? கவனித்துப் பாருங்கள். பணத்தைக் கொடுத்தீர்கள். பத்திரிக்கையை நடாத்தவும் சொன்னீர்கள். ஆனால் வழியிலே போகிற ஏல விவசாயியல்லாத ஒருவருக்கு இப்பத்திரிகை பணத்தினால் நடக்கிறது; கூட்டுறவினால் நடக்கிறது என்பதைத் தவிர்த்து ஆராய்ச்சியினால், ஆவலினால் நடக்கிறதென்று கண்டுகொள்ள முடியாததாயிருக்கிறது. பிரிய சகோதரர்களே, சிறுவன் சொல்வதில் வருத்தம் வேண்டாம். 2000-க்கு மேலான அங்கத்தினர்களையுடைய ஏல விவசாயச் சங்கத்தார்களே, ஏலமலைக் குடியானவர்களே, இந்த ஒரு ஆண்டு காலவளவிலும் என்ன விஷய தானஞ் செய்திருக்கிறீர்கள்? என்ன அநுபவத்தைக் காட்டியிருக்கிறீர்கள்? உங்களைத் தவிர்த்து வேறு யார் 'ஏல விவசாயி'க்கு உகந்த வியாசத்தைப்புனைந்தளிப்பார்கள்? என்னே, உங்களுடைய தோட்டத்திலுள்ள ஏலச்செடியைப் போன்றே நீங்களும் சிதிலிக்க விருப்பமா, கேவலம் வருடத்திற்கு வருடம் தோட்டங்கள் காலியாகிக்கொண்டு போகின்றன. பலன் சுருங்கிக்கொண்டே வருகிறது. ஏல விவசாயியைத் துணையாகக் கொண்டு சங்கத்தாரின் ஒற்றுமையைப் பெற்றுச் சீக்கிரத்தில் நமது கஷ்டத்தைத் தவிர்த்துக்கொள்ளாவிடின் இந்நோய் நம்மை எவ்வளவு தூரம் ஆட்டிவிக்குமென்பதைக் கவனியாது கிடக்கின்றீர்கள்.

பெரியோர்களே, நம்மிடம் அஜாக்கிரதையே குடிகொண்டு நிற்கிறது. நாம் உள்ளதைக்கொண்டு திருப்தியடைகிறோம். புதியதை அவமதிக்கிறோம். நமக்குச் சிரத்தை கிடையாது. ஆராய்ச்சிக்கும் நமக்கும் வெகு தூரம் என்று காட்டி வருகிறோம். தோட்டம் காய்க்காது காடேறிப்போனாலும் 'இது கடவுளின் திருவுள்ளம்' என்று நம்மை நாமே தேற்றிக் கொள்கிறோம். முயற்சியில்லாதிருத்தல் தரித்திரத்தில் புகுத்தி விடுமென்பதை மறந்துவிடுகிறீர்கள். முயற்சியினால், சுயமுயற்சியினால் முன்னேற்றமடைந்தவனைக் காணக் கூசுகிறீர்கள். பக்கத்திலுள்ள ஆங்கிலேய அமெரிக்கனைக் கண்டு தெளியுங்கள். அவன் நம்மைப்போன்றே அவனது பள்ளிக்கூடத்தில் 4-வது வகுப்புவரைப் படித்திருப்பான். அவனுடன் உசாவிப்பாருங்கள். உலகத்திலுள்ள பலப்பல கிருஷி முறையின் சாரத்தைக் கேட்டவளவில் கக்கித்தருவான். கேவலமான இலக்கண வழுவிருந்த தன்னடையில் பல வியாசங்களைத் தனக்குத் தெரிந்ததை, தான் அநுபவத்தில் கண்டதை உள்ளபடி எழுதித்தள்ளுவான். அவனுக்கு ஆத்திரம் இருக்கிறது. அவன் ஆராய்ச்சியில் பிரியப்படுகிறான். இலாபத்தி



லேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறான். 'அடிக்கடி என் பேரை வீணாய் விளிக்காதே' என்ற விவிலிய நூலின் அரிய போதனையின்படி தன்னாலாகக் கூடியதையெல்லாம் கடவுளின் பேரில் சுமத்தமாட்டான். அவன் விடா முயற்சியுடன் உழைக்கிறான். பக்கத்திலுள்ளவன் பொறுமைப் படும்படியாய் இரண்டு மூன்றாண்டுகளுக்குள் கேவலமானவன் முன்னேற்றத்திற்கு வந்துவிடுகிறான். பணத்தையும், உழைப்பையும் ஆராய்ச்சியில் அவன் ஒரு சிறிதளவும் மதிக்கிறானில்லை.

ஏல விவசாயச் சகோதரர்களே, நாம் என்ன செய்கிறோம்; நாம் என்ன செய்யவிருக்கிறோமென்பதைக் கவனியாது வீணே கிடக்கிறீர்களா? லட்சக்கணக்கான மைல் தூரத்திற்கப்பாலிருந்து வந்த முயற்சியுள்ளவனுக்கு நம்முடைய கொல்லைப் புறத்திலிருந்த பொன் விளையும் பூமியையும் விட்டுக்கொடுத்ததைப் போல ஆராய்ச்சியையும், அநுபவத்தையும் அவனுக்கே சாசுவதமாகக் கொடுத்துவிடப்போகிறீர்களா? வேண்டாம், எழுந்திருங்கள்; ஒன்று கூடுங்கள்; சுற்றுப்புறங்களைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். நிலைமை நன்கு தெரியும். அப்பொழுது உங்களை முயற்சி தானாகவே கவர்ந்து தீவிர முயற்சியில் கொண்டு வந்துவிடும். இதனால், நாமும் சீர்ப்படுவதுடன் நோய் வாய்ப்பட்ட நமது ஏலச்செடியையும் விடுவிக்க வழியுண்டாகும். சகோதரர்களே! உலகம் எவ்வளவு கூடுதலான விரைவுடன் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறதென்பதைக் கவனியுங்கள். வாயு வேகத்தையும், மனோ வேகத்தையும் மனித சிருட்டிப்புவேகம் அடித்துக்கொண்டு முன்னணியில் தாவிப்பாய்ந்து கொண்டு போகிறது. வருடக்கணக்கில் முடியாது கிடந்த நூதன சிருட்டிப்புக்கள் நாளடைவில் விநாடிக்கணக்கில் வந்து முடியுங்காலம் சமீபித்து விட்டது போலும். ஊக்கமுள்ள மனிதன், உற்சாகமுள்ள மனிதன் எந்தத் துறையில் என்ன பாக்கிவைத்திருக்கிறான்? ஒன்றுமில்லை. படிப்பும் பத்திரிகையும் உலாவமுடியாத ஒரு இடத்தில் இருப்பதைக் கொண்டு மகிழ்ந்து கிடக்கிற ஸ்தலத்தில், கூட்டுறவில் நம்பிக்கையில்லாத முடக்கிலுள்ள நம்மைப்போன்றவர்கள் மட்டும் 'விவசாயத்தில் என்ன சாதனை, என்ன முன்னேற்றம் உலகமடைந்திருக்கிறதென்று குதர்க்கம் பேசி மமதைகொண்டு விசாரிப்பில்லாது கிடக்கிறார்கள். அப்படியல்ல, ஏல விவசாயிகளே, கிருஷிக்குகந்த சகல நல்ல வளங்களும் பொருந்தியமையப் பெற்ற நாட்டையுடையவர்களே, தாவரங்களை உயிர்த் தோழர்களாகக் கொண்டு நடந்த முன்னோர்களின் சிறந்த புதல்வர்களே, டாக்டர் போஸின் சகோதரர்களே, உங்களுடைய ஞானக்கண்ணைச் சிறிது விழித்துப் பாருங்

கள், விவசாயத்துறையில் அபாரமான வேலைகள் நடந்தேறி வருகின்றன. இயற்கையிலேயே கிடந்த கடும்பாறைகளில் கிருஷி செய்யப்படுகின்றன. தண்ணீரேயில்லாத வெப்பமிகுந்த பாலைவனங்கள் சோலைக் காடுகளாக மாறி வருகின்றன. இடம்போதாத போழ்து அடுக்கு மெத்தை வீடுகளைப்போல மேலடுக்குப் பூமிகளையுண்டாக்கிக் கிருஷி நடத்தப்படுகின்றன. அம்மோ, இம்மட்டுமோ! நூதன யந்திரங்களினுதவியைக் கொண்டு 50 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு சிரமமான வேலையை ஒரு விநாடியில் ஒருவனைக்கொண்டு சிக்கனமாக விவசாயப் பண்ணையில் வேலை நடாத்த ஏற்பாடாகிக்கொண்டு வருகிறது. எள்ளி நகையாடி அவமதித்துத் தள்ளிய பொட்டல் தரைகள், களையானரியாத நிலங்கள் மண்ணுக்குப் பொன் விவசாயத்தில் கொடுத்து வருகின்றன. செடிகளுக்குள் காணும் பீடையை, வியாதியை மாந்திரீகர்களைப்போன்று அப்போதைக்கப்போது துடைத்துக் கொண்டு வருகிறார்கள். உற்சாகமுள்ள இந்த ஒரு கூட்டத்தாரைப் புகழாமல் போவது நன்றிகெட்ட செய்கையென்று நம்முள் ஊக்கமுள்ளவர்கள் குறை கூறுவார்கள்.

காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க நாமும் நடந்துதான் தீரவேண்டும். நம்மை நாமே செம்மை செய்து கொள்ளவேண்டும். 'இந்தியா அடிமை நாடு, சுயேச்சையில்லாத தேசம்' என்று பிறர் குறை கூற இடங்கொடுப்பது நம்முடைய நம் விவசாயத்தினுடைய சீர்கேடு என்று தெரிந்தவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஒருவனால் செய்யக்கூடியது மற்றொருவனாலும் சாத்தியப்படக் கூடியதென்பதைப்பற்றி முன்னேற்றமுள்ளவனைக்கண்டு பொறாமைப்படுங்கள். நியாயமான வழியில், பிறத்தியார்க்கு இடைஞ்சலேற்படாத வகையில் பொறாமையைப்போல் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் நிற்பது வேறொன்றுமில்லை.

ஏல விவசாயிகளே, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள். ஒன்றுகூடுங்கள். உள்ளதை உள்ளபடி பாடுங்கள். இலாபகரமாய், விசேஷமாய், நுட்பமாய்க் கண்டறிந்த அநுபவங்களையெடுத்துப் பிரசாரஞ் செய்து நம்முடைய கேவலத்தைத் தீர்க்க வழி தேடுங்கள். நான் ஒரு ஏலக்குடியானவன். எனக்கும் 50 ஏக்கர் இருக்கிறது. நாங்கள் ஒரு பத்திரிகையை நடத்துகிறோமென்று விவசாயத்துறையில் படிப்பில்லாத ஒருவனிடத்தில் வேண்டுமென்றால் சொல்லிப் பெருமை பாராட்டலாமே யொழிய மற்றும் நிபுணர்களிடத்தில் சொல்லிக்கொள்ள வழியில்லை.



ஏனெனிலோ, தோட்டமோ கானல் தீயைப்போல வியாதித் தீ பற்றியெரிந்துகொண்டே போகிறது. அத்தீயை அணைக்கக்கூடிய இயந்திரமாகிய ஆராய்ச்சியோ நம்மவர்க்குள் காணோம். பலனோ சொல்ல வேண்டியதில்லை. வரவர குறைந்துகொண்டே போகிறது. மழை குறைவினால் பலன் சுருங்குகிறதென்று சொல்வதற்கோ இடமுமில்லை. பழனி, சேர்வராயன் மலையில் 60 இஞ்சி மழைக்குள் ஏராளமான விளைவுகண்டு முதலாகி வருகிறது.

சகோதரர்களே! அறிவில் தேர்ச்சி பெற்ற நந்தலைவர்கள் பத்திரிக்கையினவசியத்தை நினைத்து அதின்மூலம் பலருடைய பாடங்களையும் அநுபவங்களையும், கருத்துக்களையும் இலகுவில் ஒன்று சேர்ப்பிக்கலாம். அதில் சிலாக்கியமானதைக் கைக்கொள்ளலாமென்று உங்களிடையில் உலாவவிட்டிருக்க, நீங்கள் அதுகொண்டு இவ்வொரு வருட காலவளவிலும் என்ன செய்திருக்கிறீர்கள்? இனியேனும் செய்யவேண்டியவைகளைத் தாமதியாது தவறாது செவ்வனே செய்யப் பன்முறையும் வேண்டிக்கொள்கிறேன்.

S. வடிவேல்,
குப்பிரண்டு, பொன்முடி எஸ்டேட்.

# கைத்தொழில்.

## III

### நமது கடமை.

"இந்தியாவைப் பொறுத்த வரையில் எங்களுக்குப் பெரிய அக்கறை ஒன்று உண்டு. உலகத்தில் மற்ற நாடுகளைவிட இந்திய நாடுதான் எங்கள் சரக்குகளை விற்பதற்கேற்ற சந்தையாகவிருக்கிறது. இந்நாட்டின்மீதுள்ள அதிகாரம் இங்கிலாந்தைவிட்டொழியுமாயின் லங்காஷயரிலுள்ள 120 லக்ஷம் ஜனங்கள் ஜீவனோபாயமில்லாமல் தவிக்க நேரிடும். இதுவே எங்கள் முதல் நோக்கம்" என்று இங்கிலாந்திலுள்ள "மார்னிங் போஸ்டு" என்ற பத்திரிகை ஆங்கிலேயரின் உள்ளக் கருத்தை ஒரு முறை விளம்பியிருக்கிறது. இவ்வுரைகளைக் கண்டபின்னராவது இந்தியருக்கு விழிப்புண்டாக வேண்டாமா? இத்தகைய உண்மை நிலைகளை அறிந்தே இந்திய தேசாபிமானிகள் நந்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கென பெரிதும் வேலைசெய்ய முற்பட்டுள்ளார்.

இவ்வமயத்தில் இந்தியப் பொதுமக்கள் அத்தேசாபிமானிகளின் உரைகளைச் செவிமடுத்து, உலக நிலையையோர்ந்து நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்க முற்படவேண்டியது மிகவும் அவசியமாகும். முதற்கண் இந்திய ஸ்திரீ, புமான்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் கூடியவகையில் நமது நாட்டுப் பொருள்களையே வாங்கி உபயோகிக்க உறுதிகொள்ளவேண்டும். அத்துடன் அரசாங்கத்தாரை எதிர் பாராமல் ஆங்காங்கே தனவந்தர்கள் ஒன்றுகூடி மூலநிதிகளை ஏற்படுத்தி அயல் நாட்டாரைப்போல்



அவசியமான பலவித யந்திர சாதனங்களை நந்நாட்டிலும் ஏற்படுத்தி தொழில்களை நடத்த முன்வர வேண்டும். நம்மவருக்கு நவீன கைத்தொழில்களில் பழக்கம் தேவையாதலால் இந்திய மாணவர்கள் பலரை மேல்நாடுகளுக்கனுப்பிவைத்து, ஆங்காங்கே நடைபெறும் கைத்தொழில்களைக் கற்றுவரச்செய்து, அவர்களைக் கொண்டு நந்நாட்டில் பல தொழில்களையும் நடத்தவேண்டும். இம்முறையில் உழைப்பதற்கெனச் சில வருஷங்களுக்குமுன் சென்னையில் தேசாபிமானிகளில் சிலர் "சுதேசக் கைத்தொழில் நிதி" என்ற பெயரால் ஒரு நிதி ஏற்படுத்தி, நாட்டில் ஆங்காங்கே ஆண்டுகள்தோறும் தீபாவளி வசூல் போன்ற முறையில் பணம் சேகரித்துச் சில மாணவர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பிப் பலவித கைத்தொழில்களைக் கற்றுவரச் செய்ய முனைந்து வேலை செய்தனர். அம்முயற்சிக்கு யானும் சில ஆண்டுகள் துணை நின்று உழைத்து வந்தேன். ஆயினும் சிலரது தவறுதலால் அந்த ஸ்தாபனம் குன்றிவிட்டது. எனவே தேசாபிமானம் கொழுந்து விட்டெரியும் இக்காலத்தில் பொது ஜனங்கள் பல சங்கங்களைக் கண்டு இத்துறையில் தீவிரமாக வேலை செய்யவேண்டும்.

நமது நாடு பரந்த இடமும், திரண்ட ஜன சமூகமும், நிரம்ப மூலப்பொருள்களும் உடைய நாடு. ஆகவே கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களுக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல நாம் அயல் நாடுகளை எதிர்பார்க்க வேண்டுவதில்லை. நமது விவசாயிகள் நமக்கு வேண்டிய எப்பொருள்களையும் விளைவித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கின்றனர். நமக்கு முயற்சியொன்றே தேவை.

இந்திய ஜனத்தலைவர்களென்போரின் முழு கவனமும் இன்று அரசியலையே நோக்கி நிற்கிறது. ஆகவே நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு அவர்கள் முன்வந்து வேலை செய்வார்களென்றெதிர்பார்க்காமல் விவசாயிகளும், வர்த்தகர்களுமாகிய பொது ஜனங்

களை சுதேசக் கைத்தொழில் பெருக்கத்திற்கான வழிகோலவேண்டும். இன்று மகாத்மா காந்தியடிகளார் கண்டுள்ள கத்தர் இயக்கம் நம் சுதேசக் கைத்தொழில் வளர்ச்சிக்கான முதற்படியாகும். இப்பொழுதே நந்நாட்டில் ஆங்காங்கே தேசாபிமானிகள் சிலரால் சிற்சில சுதேசக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. நந்நாட்டில் நாகபூர், பம்பாய், கான்பூர், அகமதாபாத், சென்னை முதலியவிடங்களில் பருத்திநூல் வஸ்திர மில்லுகள் இதுகாலை 300 வரை தோன்றி வேலைசெய்து வருகின்றன. அவற்றில ஆண்டு தோறும் 100 கோடி பெறுமான நூலும், துணியும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவையன்றி நந்நாட்டில் 20,00,000 கைத்தறிகளும் இப்பொழுது வேலைசெய்து வருகின்றன. அவற்றால் 60 லக்ஷம் தொழிலாளர் வேலைசெய்து, ஆண்டுக்கு 70 கோடி ரூபாய் சம்பாதிக்கின்றனர். இவ்வளவுதூரம் நமது நாட்டில் நூலும், துணியும் தயாரிக்கப்பட்டு வரினும், வருடந்தோறும் 70 கோடி ரூபாய் பெறுமான துணிகளும், நூல்களும் அயல் நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகின்றனவென்றால், நம்மை நாம் காத்துக்கொள்ள இன்னும் நெசவுத் தொழிலில் நாம் எவ்வளவு தூரம் முன்னேற வேண்டியிருக்கிறதென்பது புலப்படும். ஆகவே இன்னும் பல பருத்தி மில்லுகள் நந்நாட்டில் தோன்ற வேண்டும். கைத்தறிகளையும் பெருக்கவேண்டும். இராட்டினத் தொழிலையும் வளர்க்கவேண்டும்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஒவ்வொரு தொழிலுக்கும் யந்திர சாதனங்கள் தோன்றி, மக்களை அடிமைகளாக்கி, அவர்கள் வாழ்க்கையைப்பலவழிகளில் சிதைத்து வருகின்றன. அந்நாடுகளிலேயே அறிஞர் பலர் யந்திர நிர்மாணங்கள் அளவுகடந்து வளர்ந்து வருவதைப்பற்றிக் கண்டித்து வருகின்றனர். இங்ஙனமிருக்க நந்நாட்டில் எல்லாத் தொழில்களுக்கும் யந்திர நிர்மாணங்களைக் காணவேண்டுமென்பதும் சரியல்ல. இப்படிக் கூறியதால் வாய் வேதாந்திகள் சிலரது கூற்றைப் போல யந்திர சாதனங்களே நமக்குத் தேவையில்லையென்பதும் கருத்தல்ல.



159615

பிரபஞ்சமே இன்று இயந்திர யுகத்தில் இயங்கிவருகிறது. ஆதலால் அதற்கு மாறாக இயந்திரங்களை [illegible]மாயின் உலகப் போட்டியில் நாம் கீழ்மையடைவது நிச்சயம். ஆதலால் அவசியமான அளவுக்கு நந்நாட்டிலும் இயந்திர சாதனங்களைக் கண்டே நாம் உலகப் போட்டியில் முன்னின்று போராட வேண்டும். ஆனால் முற்றும் இயந்திரங்களையே நம்பவேண்டிய நிலை நமக்கில்லை. ஏனெனில் இயற்கை மூலப்பொருள் யாவும் நமது நாட்டிலேயே நமக்குக் கிடைப்பதாலும், தொழில்களைப் புரிவதற்கேற்ற ஜனத்தொகை நமக்கிருப்பதாலும் அநேக தொழில்களைக் கைகளால் செய்தே இயந்திரப் போட்டிக்கு நாம் ஈடுகாட்ட முடியும். ஐரோப்பிய நாடுகளில் தீக்குச்சிகள் இயந்திரங்களால் தயாரிக்கப்படுகின்றன. ஜப்பானிலோவென்றால் தீக்குச்சித் தொழில் குடிசைத் தொழிலாக வீடுகள்தோறும் கைகளால் செய்யப்படுகின்றன. இன்று நமது கடைகளில் ஐரோப்பிய தீக்குச்சிகளோடு ஜப்பானிய தீக்குச்சிகள் எப்படிப் போட்டியிட்டு வருகின்றனவென்பதைக் கவனியுங்கள். இவ்வுதாரணத்தால் அநேக தொழில்களை நமது நாட்டில் குடிசைக் கைத்தொழிலாகச் செய்வதற்கு ஏற்ற அனுகூலங்கள் இருக்கின்றனவென்பது விளங்கும்.

சென்ற டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் வாரத்தில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய கைத்தொழிற் பொருட் காட்சியைக்கண்டவர்களுக்கு எத்தனையோ கைத்தொழில்களைக்குடிசைக் கைத்தொழிலாக நந்நாட்டில் நம்மவர் சுலபத்தில் செய்யலாமென்பது விளங்கியிருக்கலாம். ஆனால் இவ்வுணர்ச்சி நாடெங்கும் பொதுமக்களிடையில் தோன்றும்வண்ணம் பிரசாரம் செய்யப்பட வேண்டியதவசியம். இதற்கெனப் பொதுவாக இந்தியாவில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஜில்லாவிலும் கைத்தொழிற் பொருட்காட்சிகளை நடத்தவும், எவ்வெச் சாதனங்களைக்கொண்டு எவ்வெத் தொழில்களை எவ்வெவ்விதம் புரிவதென்பதை சாமானிய ஜனங்களுக்கு விளக்கிப் போதிக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் கைத்தொழிற் பாடசாலை ஒவ்வொன்றை ஏற்படுத்த

வேண்டும். ஜில்லாக்கள்தோறும் இதற்கெனச் சங்கங்கள் காண வேண்டும். அச்சங்கங்கள் ஜில்லா முழுவதும் சுற்றிப் பார்த்து எவ்வெவ்விடங்களில் எவ்வெத் தொழில்களைச் செய்யலாமென்பதை நிர்ணயித்து, அவ்விடத்தில் மக்களை அவ்வத் தொழிலைச் செய்யுமாறு ஊக்க வேண்டும். அவ்வப்போது அவர்கள் தயாரித்த பொருள்களைப்பெற்றுக்கொண்டு அவற்றிற்கேற்ற விலையைக் கொடுக்கவேண்டும். அவ்விதமே மூலப்பொருள்களையும் மலிவாகக் கிடைக்குமிடங்களிலிருந்து வாங்கித் தொழிலாளருக்குச் சரசமாகக் கொடுத்தும் உதவவேண்டும். இவையனைத்தும் கூட்டுறவு முறையில் நடைபெறச் செய்வது சாலச் சிறந்ததாகும்,

தமிழ் நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கெனவே சிறப்பாகச் சில தமிழ் பத்திரிகைகள் தோன்றவேண்டும். கல்கத்தாவினின்றும் ஆங்கிலத்தில் வெளியாகும் "Industry" (கைத்தொழில்) என்ற பத்திரிகையின் மாதிரியைப் பின்பற்றி அவை வேலைசெய்ய வேண்டும். அப்பத்திரிகைகள் சிறு கைத்தொழில் முதல் பெரிய தொழில்வரை ஒவ்வொன்றையும் எவ்விதம் செய்வது? அதற்கு உரிய சாதனங்கள் யாவை? அவை எங்கே கிடைக்கும்? மூலதனம் எவ்வளவு வேண்டும்? அவ்விதம் தயாரித்த பொருள்களை எப்படி—எங்கே விற்பது? எங்கே அதற்குத் தேவை அதிகம்? என்பது போன்ற விஷயங்களை மக்களுக்குப் போதிக்கவேண்டும். இதுபோன்ற முயற்சிகளுக்கு உதவி புரியும்படி நமது நாட்டு ஸ்தல சுயாக்ஷி ஸ்தாபனங்களையும், துரைத்தனத்தாரையும் கட்டாயப்படுத்தப் பிரயத்தனப்பட வேண்டும்.

நமது நாட்டில் எத்தனையோ தனவந்தர்களிருக்கின்றனர். அவர்களுடைய பணம் நாட்டில் கரந்துறைகிறது. அத்தகையோருக்கு அறிவாளிகள் அறிவுறுத்தி அவர்களைக்கொண்டு பலவித தொழிற்சாலைகளை ஏற்படுத்தச் செய்ய வேண்டும். கூட்டுறவு முறையில் சாமானிய மக்களும் பலர் ஒன்று கூடி நிதி ஏற்படுத்தித் தொழிற்சாலைகளைக்கண்டு ஊதியமடையலாம். இந்தியாவில் டாடா



கைத் தொழிற்சாலைக்கிணையாய் மற்றொரு ஸ்தாபனத்தைப் பார்ப்பதற்கில்லை. கடந்த சில வருஷங்களாக நாட்டில் ஆங்காங்கே சிற்சில தொழிற்சாலைகள் தோன்றி பென்சல் செய்தல், தீக்குச்சிகள் செய்தல், சோப்புச் செய்தல், தேங்காய் எண்ணெய் செய்தல், அலுமினியப் பாத்திரங்கள் செய்தல், காகிதம் செய்தல், பொத்தான்கள் செய்தல் முதலிய தொழில்களைச் செய்து வருகின்றன. ஆயினும் அயல் நாட்டுப் பொருள்களோடு போட்டிப்போட முடியாமல் இத்தொழில்கள் பெரும்பாலும் நஷ்டமடைந்து வருகின்றன. இச்சமயத்தில் துரைத்தனத்தார் உண்மையில் நாட்டின் நலத்திற் கருத்துடையவராயின் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு வரி விதித்து அவ்வகையில் சுதேசத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கலாம். இவ்விஷயத்தில் பொது ஜனங்கள் தீவிரமான கிளர்ச்சி செய்யவேண்டும்.

பண்டு முதல் நாட்டில் நடைபெற்று வரும் கயிறு திரித்தல், பிரம்புவேலை, மூங்கில் சிம்புகளால் முடைதல், தோல் பதனிடுதல், குடைகள் தயாரித்தல், பாய் பின்னுதல் போன்ற பற்பல தொழிற்களையும் காலத்திற்கேற்ப புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்து அபிவிருத்தியடையச் செய்யவேண்டும். கலாசாலைகளில் படித்து வெளியேறும் இந்தியமாணவர்கள் உத்தியோகத்தையேபெரிதெனமதிக்காமல் சிறந்த கைத்தொழில்களைக் கற்று அவற்றைச்செய்ய முற்படுவார்களாயின் இந்தியக் கைத்தொழில்களில் பல புதுமைகள் ஏற்படும், இதனால் படித்தவர்களிடையில் வேலையில்லாத திண்டாட்டமும் ஒழியும். இந்தியாவுக்குச் சுயாக்ஷி வேண்டுமென்று விரும்பி வேலைசெய்து வருகிறோம். இந்நிலையில் பிறநாடுகளுக்குச் சமமாக நாமும் வாழ்வதற்குத் தற்காலத்திய நவீன போக்குவரவு சாதனங்களும், நவீன காப்புக் கருவிகளும் தேவையல்லவா? துவிச்சக்கரவண்டி, மோட்டார் வண்டி, இரயில் வண்டி, ஆகாய விமானல், நீராவிக் கலங்கள் முதலியவைகள் முழுதும் நமது நாட்டில் செய்யப்படவேண்டாமா? அவற்றைச் செய்வதற்கேற்ற ஆற்றலும், அறிவும் நம்மவருக்கில்லையா? இந்தியரே! உங்கள் நிலைமை உற்றுக்கவனியுங்கள்.

இந்தியரிடையில் தம் வம்சத்தின முன்னோர்கள் ஒரு தொழிலை எவ்வேலைச் சாதனங்களைக்கொண்டு எப்படிச் செய்தார்களோ அதற்குச் சிறிதும் மாறாமல் அப்படியே தாமும் செய்ய வேண்டுமென்றும், புதிய சீர்திருத்தங்கள் எத்துணை மேன்மையாகக் காணப்படினும் அவற்றை யனுசரித்தல் தஞ் சமயத்திற்கோ—சமூகத்திற்கோ கெடுதியானதென்றும் எண்ணும் மூட நம்பிக்கை இருந்துவருகிறது. இவ்வித குறைகளை கற்றுணர்ந்தவர்கள் நீக்க முயலவேண்டும். மேலும் குறிப்பிட்ட இத்தொழில்களை இன்னார்தான் செய்யவேண்டுமென்ற சமூகக் கட்டுப்பாடும் நந்நாட்டில் உண்டு. ஆயினும் அக்கட்டுப்பாடு இதுபோழ்து தளர்ந்துவருகிறது. சில தொழில்களைச் செய்வது சிலருக்குத் தமது சமூக உயர்வுக்குத் தாழ்வானதென்ற கொள்கை நம்மில் வேரூன்றியிருக்கிறது. சில தொழில்களைத் தாழ்ந்த குலத்தோரென்பவர்களே செய்யவேண்டுமென்கிற கொள்கையும் நம்மிடையிலிருக்கிறது. இவ்வித எண்ணங்கள் ஒழியவேண்டும். தொழில் உலகில் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்ச்சியில்லை. மனித சமூகத்திற்கவசியமான தொழில்களனைத்தும் சமமானவைகளேயாம். சமீபத்தில் அமெரிக்க நாட்டுப் பிரசிடெண்டு அவர்கள் அப்பெரும் பதவி தமக்குக் கிட்டியதை முன்னிட்டுச் செருப்புகள் தைத்து ஜீவிப்பவராகிய தமது தோழர் ஒருவருக்கு வந்தனோபசார—சந்தோஷக் கடிதம் எழுதியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த சங்கதியை அநேகர் கவனித்திருப்பார்கள். அவ்விஷயம் எதை அறிவுறுத்துகிறது? அந்நாட்டில் தொழிலைப்பற்றி உயர்வு தாழ்வுகள் கிடையாதென்பதைக் காட்டவில்லையா? மகாத்மா காந்தியடிகளார் தஞ் சுய சரித்திரத்தில் ஒரு சமயம் காங்கிரஸ் மகாநாட்டுக்குச் சென்றவிடத்தில் மல ஜலக் குப்பைகளைத் தாமே முன் சென்று அப்புறப்படுத்தியதாக எழுதுவதைக் காணும்போது அன்னார் தொழில் முறையில் உயர்வு தாழ்வுகளில்லையென்பதைச் சுட்டாமற் சுட்டிக்காட்டியுள்ளாரென்பது வெளியாகவில்லையா? நமது இந்திய நாடு பல வழிகளில் தாழ்வடைந்ததுபோல், தொழில் முறையிலும் தாழ்வடைந்ததற்கு இந்நாட்டில் மலிந்த உயர்வு தாழ்வுகளோடு கூடிய ஜாதிப்பிரிவுகளும், சமயச் சண்டைகளும், சுயநலக் கருத்துகளுங்கூட ஒரு சிறிது காரணமாமென்பதில் தடையில்லை.



கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலிய துறைகளில் ஜீவிப்பவர்களே சுதந்தர ஜீவனமுடையவராவர். உத்தியோகம் செய்து பிழைப்பவர் என்றும் அடிமைகளேயாகும். இவ்வுண்மையை நமது சர்மானிய மக்கள் என்று உணருகிறார்களோ அன்றே தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் கௌரவமும், நன்மதிப்பும் ஏற்படும். அப்பொழுதே அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் கண்டால் அஞ்சி நடுங்கி, அவர்தம் அடிகளில் வீழும் அடிமைப்புத்தி நம்மவரை விட்டு அகலும். இனி வருங்காலம் தொழிலாளருடையதென்பதைத் தற்கால உலக சரித்திரம் நமக்கு நினைவூட்டுகிறது. ஆகவே இந்திய சகோதர சகோதரிகளே! தேசாபிமானம் மிக்க புண்ணிய சீலர்களே!! இந்திய கைத்தொழில்களை ஆதரியுங்கள். பற்பல புதிய கைத்தொழில்களை ஏற்படுத்துங்கள். தொழிலாளருக்குத் துணை நில்லுங்கள். நமது நாட்டைக் கைத்தொழில் நாடாக்குங்கள். அரசியலிலேயேயன்றி வியாபாரத் துறையிலும் அயல் நாடுகளுக்கு அடிமையாகியிருக்கும் இந்தியத் தாயின் அடிமைத் தளைகளை அறுத்தெறியுங்கள். சுதந்தர தேவியின் ஆசியைப் பெறுங்கள். உங்கள் நல்லெண்ணம் ஈடேறுவதாக. வந்தேமாதரம்.

என். வேங்கடரமணன்.

# மிளகு

வியாபாரிகள் கறுப்பு மிளகு, வெள்ளை மிளகு என்று வழங்கும் சரக்குகள், தோட்டங்களில் உண்டுபண்ணப்படும் மேலே எழுந்து வேறு மரங்களில் பற்றிப் படரும் ஒருவகைக் கொடியின் காய்களே.

இந்தக் கொடிகள் 2500 அடி உயரத்துக்கு மேற்படாத நிலங்களில் வளர்வதை அறிவோம். ஆனால், இவை இதனினுந்தாழ்ந்த 1700 அடி உயரத்துக்கு மேற்படாத மலைபடுத்த இடங்களிலே தான் மிக நன்றாக வளர்கின்றன. ஒரு வருடத்தில் 80 இஞ்சு தொடக்கம் 100 இஞ்சு வரையில் மழை பெய்கிறதும், வெப்பமும் சீதளமும் சராசரியுள்ள இடங்களே மிளகு செய்கைக்கு வாய்ப்பாகும். நெடுங்காலம் மழையில்லாமல் வறண்டு போகும் நிலங்கள் இந்தச் செய்கைக்கு உதவாது.

இயல்பாகவே வெள்ளம் பிடியாமலும், ஈரங்காயாமலுமுள்ள இடங்களே மிகவும் வாய்ப்பாகும். ஆனால் நெடுங்காலம் சதுப்பாய்நிற்கும் இடங்கள் கூடா. நொய்த நிலங்களில் இந்தப் பயிரை உண்டுபண்ணவேண்டுமானால் மிருக தாவர உறுப்புக்கள் அடங்கிய பசளைகளை ஏராளமாய் இடவேண்டும். ஆற்றங்கரைகளிலுள்ள சமபூமியில் இப்பயிர் நன்கு வளரும்; ஆனால் ஆறு பெருகி மூடாதிருக்கும் இடமாய் இருத்தல்வேண்டும். மலையுச்சிகளில் நடுதல் வாய்ப்பன்று.

மிளகுக் கொடிகள் படரக் கொழு கொம்புகள் வேண்டும். இந்தச் செலவைச் சுருக்கமாக நடப்பிக்க வேண்டுமானால், உயிர்

மரங்களில் இக்கொடிகளை ஏறிப் படரவிடலாம். இயல்பாக ஒரு கொடி 20, 25 அடி உயரத்துக்கு வளரும். ஆனால் 15 அடி உயரத்துக்குள் அடக்கி வளர்த்தல அதிக விளைவுக்குக் காரணமாகும். புதிதாய் நடுகைக்காகக் காடழிப்பவர்கள், இசைவான மரங்களைக் கொழுகொம்பாகப் பாவிக்கும்பொருட்டு அவற்றைத் தறியாதொழிக. ஆனால் வெளியான இடங்களில் நடத்தொடங்கவேண்டிய மரங்களை நட்டு உண்டுபண்ணவேண்டும். வழக்கமாய், சொக்களாத்தித் தோட்டம் முதலிய நிலைபான பயிர்கள் இருக்குந் தோட்டங்களில் மிளகு நடுபவர்கள் ஆங்காங்குள்ள நிழல் மரங்களில் அவற்றை ஏற்றிப் படரவிடுவார்கள். கொழுகொம்புகளாய் உபயோகித்தற்கு வாய்ப்பான மரங்கள் பலா, மா, கமுகு துணு, முள்முருக்கு என்பவைகளே. எட்டடி சதுரத்துக் கொவ்வொன்றாய் நடப்பட்ட முள்முருக்குகளிலும், கமுகுகளிலும் ஒரு மரத்துக்கு ஒரு கொடிக்குமேல படரவிடுதலாகாது. இவ்வகையாய் நட்டால் ஒரு ஏக்கருக்கு 680 கொடிகள் நடலாம். முள்முருக்குகளை வருடம் ஒருமுறை சோளகக்காற்றுப் பெயருங்காலத்தில் மழை தொடங்தும்பொழுது 15 அடி உயரத்துக்கு மேற்படாமல் தறித்துவிடுதல் வேண்டும். 18 அடி சதுரத்துக் கொன்றாய் நடப்படும் துணு மரங்களில் ஒரு மரத்துக்கு இரண்டு கொடி வீதம் படரவிட்டால் ஒரு ஏக்கருக்கு 268 கொடியாகும். மா, பலா முதலிய பெருமரங்கள் 25, 30 அடி தூரத்துக் கொவ்வொன்றாய் நிற்குமாதலால் ஒரு மரத்துக்கு மூன்று நாலு கொடி வீதம் நட்டால் ஒரு ஏக்கருக்கு 200 கொடியாகும்.

வழக்கமாய் வெட்டுக் கொடிகளையே நட்டு உண்டுபண்ணுகிறார்கள். இவைகள் 1½ அடி 2 அடி நீளமுள்ளவைகளாயிருத்தல் வேண்டும். இவற்றைத் தாய்க்கொடியின் அடியினின்று முளைத்துவருங் கொடிகளிலிருந்தும் நுனியிலிருந்தும் வெட்டியெடுக்கவேண்டும். அடியில் முளைத்துவரும் கொடிகளின் பொருத்துகளில் வேர் உண்டு. கொடியின் கிளைகளிலிருந்து வெட்டி நடுக்கொழுந்து எடுத்தல் கூடாது. அப்படிச்செய்தால் அநேகம் பட்டுப்போம். வெட்டியெடுத்த கொழுந்துகளை முதலில் பதிவைத்து, அல்லிகட்டுமவைகளைக் கூடைகளிலிட்டுப் பின்பு வாடாமல் உண்டாகின்றனவோ என்று பார்த்துப் பின்புதான் நடவேண்டிய இடங்களில் நடவேண்டும். நட்ட கொழுந்துகளைச் சரியாய் நிழலிட்டுத் தண்ணீர் வார்த்து உய்யும்வரையும் மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல்வேண்டும். பதிவைத்த கொழுந்துகள் நூற்றுக்கு 5 வீதந்தான் அல்லிகட்டுமாகையால், திருப்பவும

பதிவைத்துப் பாதுகாத்தாற்தான் நடுகைக்குக் காணக்கூடிய அளவு நடுக்கொழுந்து கையாடலாம், நடவேண்டிய காலத்துக்கு 6 மாசத்துக்கு முன் பதி வைக்கவேண்டும். சில கொழுந்துகள் அல்லி கட்ட நெடுநாட்செல்லும்.

நடுதற்கு வேண்டிய கன்றுகளை நாற்றிட்டு உண்டுபண்ண வேண்டுமாயின் 18 மாதஞ்செல்லும். நாற்றைத் தெளிக்கு முன் மூன்று நாளைக்குத் தண்ணீரில் ஊறவிடவேண்டும்.

சிலர் கொடியிலிருந்து ஒரு பகுதியை வெட்டியெடுத்தும் நடுவர். நடுங் குழிகள் ஒரு அடி வட்டமும், 3, 4 அங்குலந் தாழ்வுமானவைகளாயிருக்கும். இந்தக் குழியில் அக்கொடித் துண்டு, சாய்ந்து நிற்கத் தக்கதாய்ச் சரிவாக நடப்பட வேண்டும். நட்டவுடனே அதன் பக்கத்தில் ஓர் தடியைத் தாபரமாய் நட்டு அதனோடு சேர்த்துக் கட்டிவிடவேண்டும். இந்த தாபரத்தைப் பற்றிப்பிடித்தே கொடி வளரும். நடும்போது நன்கு உக்கின எருவும், சுட்ட மண்ணும் கலந்து போட்டுக் குழியை நிரப்ப வேண்டும். உடனே நிழலிடவேண்டியதும் அவசியம். கோடை காலமானால், நீர்ப்பாய்ச்சவும் வேண்டும்.

நன்கு வேரூன்றியபின், கொடியின் அடியிற் பசளையைக் கரைத்து ஊற்றவேண்டும். மாரிகாலத்திலே தாபரத் தடியைப் பிடுங்கிப்போட்டு அடியைச் சிறிது கிண்டிக் கொடியை நிமிர்த்தி விடவேண்டும். இப்படிச் செய்யும்போது வேருக்கு இடையூறு உண்டாகாதபடி காத்துக்கொள்ளவும் வேண்டும்.

முதல் வருடத்திற் களை பிடுங்கவேண்டும். பிடுங்கும்போதே தூர்கவ்விக்கொள்ளத்தக்கதாய்க் கொடியின் அடியைக் கிண்டிக்கிளறி விடுவதும் புத்தியான செயலாம். நிழலிருக்கும் போது களை அதிகமாயுண்டாகாது.

முதலாம் வருடத்திலே நிலம் 3 அங்குல ஆழத்துக்குக் கொத்தப்படவேண்டும் கொத்தும்போது கொடிகளின் அடியிலே மண்ணைச் சற்று உயர்ந்துநிற்கச் சேர்த்துவிடுவது நல்லது.

எப்படிப்பட்ட நிலத்திலுங் கொடிகள் முதல் வருடத்திலே ஒரு அடி வளரும். இரண்டாம் வருடத்தில் 6 அடி வளர்ந்துவிடும். இரண்டாம் மூன்றும் வருடத்திற்கிடையிற் காய்க்க ஆரம்பிக்கும். அப்பொழுது எட்டு அல்லது பத்து அடி வளர்ந்துவிடும். காய்க்கத் தொடங்கியபின் இரண்டு அல்லது மூன்று கிளைக்கு மேற்படக் கொடியிலிருக்கப்படாது. மீதியானவையைக் களையவேண்டும். நுனி சடைத்திருந்தால், அதைக் கத்தரித்துவிடுக.



## பலன் சேர்த்தல்.

கறுப்பு மிளகு:— மிளகுக் காய்கள், முதலிற் பச்சை நிறமாயும், பின்பு மஞ்சள் நிறமாயும், பழமாகும்போது சிவப்பு நிறமாயுமிருக்கும். நன்கு சிவந்தபின்பே பழங்களைப் பிடுங்குவார்கள். பிடுங்கியவுடன் எல்லாவற்றையும் ஓர் அறையுட் குவித்து வைப்பார். நாலு மூன்று நாட்களுக்குப் பின் அவைகளைப் பிரித்துப் பாவிக் காம்புகள், சருகுகள் முதலிய கஞ்சல்களைத் தட்டி உதிரப் பண்ணுவார்கள். நன்கு உலர்ந்தபின் கஞ்சல் நீங்கத் தூற்றுவர். அப்பொழுதே மிளகு வேறாகப் பிரியும். அடுத்தநாட் காலையில் கொதித்த வெந்நீரில் அம் மிளகைச் சிறிது நேரம் போட்டுவைப்பர். பின் தண்ணீரிலிருந்து வடித்து எடுத்துப் பாயிலே காயப் போட்டால், இருகிச் சுத்தமான கறுத்த மிளகாய் எல்லாங்காணப்படும். தண்ணீரிலிருந்து எடுத்தவுடனேயே காயப்போட வேண்டும். சிறிதுநேரமாவது ஈரத்தோடு குவித்து வைத்தால் நிறம் மங்கலாகும். தூசும் பிடிக்கும். மூன்று நான்கு நாட்களுக்கு நல்ல வெய்யிலிற் காயப்போடுவது உத்தமம். வெந்நீரிற் கழுவும் போது, சூடும் நீரும் குறையக்குறைய, மீளவும் மீளவும் போதிய சூட்டோடு வெந்நீர் விட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். போதிய வெந்நீரிற் கழுவாவிட்டால் மிளகின் வாசம் குறைந்துபோகும்.

வெள்ளை மிளகு.—தோலை உரித்துப்போட்டுப் பழத்தை இரண்டு மூன்று நாளுக்குக் குவித்துவைக்கச் சதை நெக்கிக் கரைந்துபோம். பின்பு கடகத்தில் அள்ளிவைத்துக்கொண்டு காலால் உழக்கிப் பிசையவேண்டும். அப்பொழுது மிளகுக் கொட்டைகள் வேறாகும். அவைகளை நன்கு தண்ணீரிற் கழுவி வடித்தெடுப்பர். நம் நாட்டில் வேப்பம்பழத்திலிருந்து கொட்டைகளைப் பிரித்தெடுக்கும் வகைக்கு ஒத்ததே இதுவுமாம். இந்தக் கொட்டைகளை இரண்டுநாள் வெயிலிற் காயவைத்தபின் வெள்ளை மிளகாய் வரும். நிறத்தில் வித்தியாசமிருந்தாலும் மிளகுக் கொட்டைகள் குணத்தில் வித்தியாசப் படுகிறதில்லை.

மிளகின் விலை அந்தர் 40 ரூபாய் தொடக்கம் 60 ரூபாய் வரைக்கும் இனுசுக்குத்தக்க அளவாயிருக்கின்றது. பறை ஒன்று 12 ரூபாய் தொடக்கம் 20 ரூபாய் வரையிலும் விலைப்படுகின்றது. பறை ஒன்று 32 இராத்தல். இலங்கையிலே மத்திய தென்பகுதிகளிலுள்ள கீழ்நாட்டுப் புறங்களிலே மிளகுச் செய்கை தாராளமாய் நடைபெறுகின்றது.

க. தோ. வி.

# காலஞ்சென்ற புதுக்கோட்டை மன்னர்.

## அவரது சரித்திரச் சுருக்கம்.

இதுவரை நமது சமஸ்தானத்தை ஆண்டுவந்து சென்ற திங்களன்று காலை 11-மணிக்கு திடீரென பாரிஸில் உயிர் நீத்த மன்னர் ராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டமான் பஹதூர் 1875-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ந்தேதியன்று காலஞ்சென்ற மன்னர் ராமசந்திர தொண்டமான் பஹதூர் அவர்களின் மூத்த குமாரியின் மூன்றாவது குமாரராக ஜனனமானார். ராமச்சந்திர தொண்டமான் பஹதூர் 1877-ம் வருஷம் மார்ச்சு மாதம் 2-ந்தேதி சென்னை கவர்ன்மெண்டுக்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும், தாம் லார்டு கானிங்கினால் பிறப்பிவிக்கப்பட்ட சன்னதின் ஷரத்துக்களின்படி, தமது உடல் நலம் குன்றி வந்தபடியால் தமது மூத்த குமாரியின் மூன்றாவது குமாரனை மார்த்தாண்ட பைரவ பல்லவராயரை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதாய் நிச்சயித்துவிட்டதாகத் தெரிவித்துக் கொண்டார். 1878-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந்தேதி வைசிராயிடமிருந்து ஸ்வீகாரத்தை அங்கீகரித்துவிட்டதாக சென்னை கவர்ன்மெண்டுக்கு உத்தரவு வந்தது. ஜனவரி மாதம் 23-ந்தேதி சென்னை கவர்ன்மெண்டார் இவ்வுத்தரவை பொலிடிகல் ஏஜண்டிற்கு அனுப்பினர். பொலிடிகல் ஏஜண்டு பிப்ரவரி மாதம் 3-ந்தேதி இவ்வுத்தரவை ராஜாவுக்கு அனுப்பிவைத்தார். 1878-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந்தேதி ஸ்வீகாரம் வைசிராயால் அங்கீகரிக்கப்பட்ட சந்தோஷச் செய்தியைக் கொண்டாடவேண்டி ஒரு தர்பார் நடைபெற்றது. 1878-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ந்தேதி வ. சேஷய்யா சாஸ்திரிகள் சர்க்கிளாக நியமனம் செய்யப்பெற்றார்.



மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா ராமச்சந்திர தொண்டமான் பஹதூர் அவர்கள் 1886-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-ந்தேதி தமது 57 வயதில் காலஞ்சென்றார். எல்லாக் கச்சேரிகளும் மகாராஜாவிடம் எல்லோருக்குமிருந்த மரியாதைக் கறிகுறியாக 16 நாட்கள் சாத்தப்பட்டன.

1886-ம் வருஷம் மே மாதம் 2-ந்தேதி திருக்கோகர்ணம் பிரஹதம்பாள் சன்னதியில் அரச குடும்பத்தின் வழக்கத்தை அனுசரித்து இளவரசருக்குப் பட்டாபிஷேக வைபவம் விமரிசையாய் நடைபெற்றது. ஜூலை மாதம் 8-ந்தேதியன்று பொலிடிகல் ஏஜண்டு ராஜாவுக்கு ஒரு பட்டாக் கத்தியையும், சென்னை கவர்ன்மெண்டாரின் வாழ்த்துக் கடிதத்தையும் கொடுத்து சிம்மாஸனத்தில் ராஜாவை அமர்த்தினார். இப்பொழுது ராஜாவுக்கு வயது 11. இதற்குள் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், சித்திரம் வரைதல் முதலியவைகளில் அவர் பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவரது படிப்பையும், விளையாட்டையும், கவனிக்க ஒரு கார்டியன் நியமிக்கப்பட்டார். 1887-ம் வருஷம் காம்பிரிட்ஜ் ஸர்வகலாசாலையில் பட்டம் பெற்ற மிஸ்டர் எப். எப். கிராஸ்லி நான்பாரும் அவருக்கு உதவியாக சிலரும் ராஜாவின் கல்வி அபிவிருத்திக்காக நியமனம் செய்யப் பெற்றனர். இத்தகைய கல்வி 8 வருஷங்கள்வரை ராஜாவுக்கு அளிக்கப்பட்டது. இதன் பயனாக ராஜாவினிடத்திலிருந்த அரிய பெரிய குணங்களெல்லாம் பிரகாசிக்கச் சந்தர்ப்பம் வாய்ந்தது. 1893-ம் வருஷம் டிசம்பர் மாதம் ராஜாவின் கல்வி ஒருவிதமாக முடிவடைந்து வடக்கிந்திய பிரதேசங்களில் அவர் பிரயாணம் செய்தார். அவர் பம்பாய், அலஹாபாத், காசி, கல்கத்தா, ஆக்ரா, அஹமதாபாத், பரோடா முதலிய விடங்களுக்குச் சென்றார்.

அவரது 19-வது வயது பூர்த்தியானவுடன் சென்னை கவர்னர் லார்டு வென்லக்கினால் அவருக்கு பட்டம் சூட்டப்பட்டு அரசாங்க நிர்வாக சம்பந்தமான சமஸ்த அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. இதற்கென ஒரு விசேஷ தர்பாரும் நடைபெற்றது. தர்பாரில் கவர்னர் பேசும்பொழுது அரசருக்கு புத்திமதியாக சில வார்த்தைகள் கூறினார். அதற்குத் தக்கபடி ராஜாவும் தாம் எப்பொழுதும் ஜனங்களின் நன்மையையும் சந்தோஷத்தையும் அதிகரிக்கக்கூடிய

முற்போக்கான அரசாட்சியைக் கொள்வதாக உறுதிமொழி கூறினார். 11 மரியாதைக் குண்டுகள் போடப்பட்ட பின்னர் சமஸ்தான பட்டாக்கத்தி ராஜாவுக்கு கவர்னரால் அழிக்கப்பட்டது.

ராஜா ராஜிய நிர்வாகத்தை 1894-ம் வருஷம் நவம்பர் மாதம் ஏற்றுக்கொண்டார். இதுவரை ராஜாவின் மைனர் காலத்தில் சமஸ்தானம் திவான் ஏஜண்டு ஏ. சேஷய்யா சாஸ்திரிகள் அவர்களால் நிர்வகிக்கப்பட்டுவந்தது. இவரது நிர்வாகத்தில் ஓர் நல்ல அரசாங்கத்திற்குத் தேவையான அஸ்திவாரம் கட்டப்பட்டுவிட்டது.

1893-ம் வருஷம் மகாராஜா ஐரோப்பாவிற்குச் செல்ல ஏற்பாடு செய்தார். அவர் இல்லாத சமயத்தில் சமஸ்தானம் நன்கு நடைபெற ஒரு திவானையும், கௌன்சிலர்களையும் கொண்ட ஒரு கௌன்ஸில் நிர்வாகத்தை ஏற்படுத்தினார். கௌன்சிலர் பதவிக்கு அரசரின் மூத்த சகோதரரும் அப்பொழுது பிரிட்டிஷ் பகுதியில் டிப்டி கலக்டருமாயிருந்தவருமான மகா-ா-ா-ஸ்ரீ விஜய ரெகுநாத துரைராஜா அவர்களை அரசர் நியமனம் செய்தார். ஒரு வருஷத்திற்காக சிருஷ்டிக்கப்பட்ட கௌன்சிலர் உத்தியோகம் அதற்குப் பிறகு ஸ்திரமாக்கப்பட்டு, 10 வருஷங்கள் வரை கௌன்சிலின் அமைப்பு மாறுதலடையாமலிருந்தது.

1898-ம் வருஷம் ஏப்ரல் மாதம் மகாராஜா ஐரோப்பாவிற்குப் பிரயாணமானார். அவர் இதாலி, நேபிள்ஸ், ரோம், பிரான்ஸ் முதலிய இடங்களுக்குச் சென்றார். 1898-ம் வருஷம் மே மாதம் 23-ந் தேதியன்று வேல்ஸ் இளவரசரால் (பின்னர் ஏழாவது எட்வர்ட்) வரவேற்கப்பட்டார். 1898-ம் வருஷம் நவம்பர் மாதம் அரசர் தலைநகருக்கு திரும்பிவந்தார். ஜனங்களால் சந்தோஷத்துடனும், ராஜ விசுவாசத்துடனும் வரவேற்கப்பட்டார். விக்டோரியா மகாராணியை அரசர் பேட்டிகண்டதன் ஞாபகார்த்தமாக ஒரு டவுன் ஹாலைக் கட்டுவதெனத் தீர்மானித்து அதற்கஸ்திவாரக் கல்லும் சென்னை கவர்னர் ஸர் ஆர்தர் ஹாவ்லக்கால் 1899-ம் வருஷம் பிப்ரவரி மாதம் நாட்டப்பட்டது. இது முதற்கொண்டு அரசர் ஐரோப்பாவுக்கு அடிக்கடி போக ஆரம்பித்தார்.



1899-ம் வருஷம் ஜனவரி மாதத்தோடு திவானாயிருந்த வேங்கடதாச்சாருலுவுக்கும் சமஸ்தானத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் போய்விட்டது. பிரிட்டிஷ் டிப்டி கலெக்டராயிருந்த திவான் பகதூர் எஸ். வெங்கிடராமதாஸ் நாயுடுகாரு திவானாக நியமிக்கப்பட்டார் மகா-ா-ா-ஸ்ரீ விஜய ரெகுநாத துரைராஜா அவர்கள்தான் கௌன்சிலராக இருந்துவந்தார். இந்த ஏற்பாடு 1909-ம் வருஷம்வரை நடைபெற்றது. 1909-ம் வருஷம் மார்ச்சு மாதம் திவானாயிருந்த திவான் பகதூர் எஸ். வெங்கிடராமதாஸ் நாயுடுகாரு தமது பிரிட்டிஷ் உத்தியோகத்திற்கு திரும்பிப் போவதற்கு முன்னதாக மூன்று மாத ரஜாவில் சென்றார். ஸ்டேட் கௌன்சிலின் அமைப்பை மகாராஜா மாற்றி அமைத்தார். இது முதற்கொண்டு ஸ்டேட் கௌன்சில் மூன்று பேர்களைக் கொண்டு நடைபெற்று வந்தது. ஒரு ஐ. ஸி. எஸ். வகுப்பைச் சேர்ந்த ஸ்டேட் சூபரின்டெண்டெண்டும், திவானும், பிரதம நீதிபதி (எக்ஸ் அபிஷியோ கௌன்சிலர்) இம்மூவரும் ஸ்டேட் கௌன்சில் அங்கத்தினர்களாயிருந்தனர். மிஸ்டர் ஜி. டி. எச். பிராக்கென் துரையவர்கள் ஸ்டேட் சூப்பிரின்டெண்டெண்டாயும், ஸ்ரீ விஜய ரெகுநாத துரைராஜா அவர்கள் திவானாகவும் நியமனம் செய்யப்பட்டு புதிய கௌன்சில் மார்ச்சு மாதம் 15-ந் தேதி அமைக்கப்பட்டது. மிஸ்டர் பிராக்கென் துரையவர்கள் பர்லோவில் 1913-ம வருஷம் பிப்ரவரி மாதம் சீமை செல்ல மிஸ்டர் ஜெ. டி. குவின் துரையவர்கள் சமஸ்தான சூபரின்டெண்டெண்டாக நியமனம் செய்யப்பட்டார்.

1913-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதியன்று மகாராஜாவுக்கு ஜீ. ஸி. ஐ. ஈ. என்ற பட்டம் மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களால் அளிக்கப்பட்டது.

1913-ம் வருஷம் பிப்ரவரி மாதம் மகாராஜா அவர்களின் ஸில்வர் ஜூபிலி விழா சமஸ்தானப் பிரஜைகளால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழா 22, 23, 24-ந் தேதிகளில் மூன்று தினங்கள் கொண்டாடப்பட்டன. விழாவிற்குப் பல ஆங்கில சீமான்களும், சீமாட்டிகளும், பொலிடிகல் ஏஜண்டும் இன்னும் சில இந்தியப் பிரமுகர்களும் சமஸ்தானத்திற்கு வெளியிலிருந்து மகாராஜாவின் அழைப்பிற்கிணங்கி விஜயம் செய்திருந்தனர். இவ்விழாவை ஒட்டி அரசர் பல நன்கொடைகளை அன்புடன் அளித்தார். ஊர்வலங்களும், தேக்கச்சேரிகளும், வாணவேடிக்கைகளும் வெகு விமரிசையாய் நடைபெற்றன. ஜனங்களின் ஆழ்ந்த ராஜ

பக்தியையும் ராஜ விசுவாசத்தையும் அவர்களது உற்சாகத்தின் மூலம் காண்பித்தனர்.

1915-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 10-ந்தேதியன்று அரசர் ஆஸ்திரேலியாவில் சிட்னியென்ற விடத்தில் மிஸ். இ. எம். பின்க் என்ற மாதை மணம் புரிந்துகொண்டார்.

1915-ம் வருஷம் அக்டோபர் மாதம் 13-ந்தேதியன்று மிஸ்டர் ஜே. டி. குவின் பார்லோவில் செல்ல மிஸ்டர் சிட்னி பர்ன் துரையவர்கள் சமஸ்தான சூபரின்டெண்டெண்டாக நியமிக்கப்பட்டார்.

1915-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ந்தேதியன்று மகாராஜாவும் அவரது மனைவியும் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தனர். ஜனங்கள் உற்சாகத்துடன் தம்பதிகளை வரவேற்றனர்.

மகாராஜாவின் மனைவி 1913-ம் வருஷம் ஜூலை மாதம் 22-ந் தேதி ஓர் மகளை ஈன்றார்.

மகாராஜா 1922-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ந்தேதியன்று ஒரு ஸ்ரீ முகத்தைப் பிரசுரித்தார். "தவிர்க்கமுடியாத ராஜீயக் காரணங்களையும் சொந்தக் காரணங்களையும் முன்னிட்டு இந்தியாவுக்கு வெளியிலேயே எந்நாளும் வசிக்கவேண்டிய நிர்ப்பந்தமிருப்பதாக நான் தீர்மானித்துவிட்டதை உங்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்." என ராஜவிளம்பரத்தில் கூறியுள்ளார். அப்பொழுது திவானாயிருந்த தமது மூத்த சகோதரர் ஸ்ரீ விஜய ரெகுநாத துரைராஜா அவர்களை ரீஜெண்டாக நியமனம் செய்தார். அதுமுதல் இதுவரை ரீஜெண்டாட்சி நடைபெற்று வருகிறது.

மகாராஜா சென்ற இரண்டு மாதங்களாகவே குடல் சம்பந்தமான கடுமையான நோயின் காரணமாக அவஸ்தைப்பட்டதால் ஆபரேஷன் செய்வது ஒன்றுதான் அவரது உயிரைக் காக்கும் வழியாயிருந்ததால் அது செய்யப்பட்டது, இரண்டுமுறை தக்க வைத்திய நிபுணர்களால் நியூயார்க்கில் ஓர் அமெரிக்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டும், குணமடையாமல் காலஞ் சென்றுவிட்டார். சமஸ்தானம் முழுவதும் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. துக்கப்பட

"ஜனமித்திரன்"

சென்னை-600 005.
15963

திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்ற துணைவன் எவன்?

ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது உழைப்பவன் எவன்!

ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி உரைப்பவன் எவன்!

# அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்.

---

குறைந்த விகிதம்! நிறைந்த இலாபம்!!

நல்ல இடம்! நாணயமான கனவான்கள்!!

உங்களுக்கு

அதிக இலாபம் அடைய ஆசையா!

உங்கள்

வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா!

உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள் வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா!

பின் ஏன் தாமதிக்கிறீர்கள்?

உடனே "ஏல விவசாயி" யில்

விளம்பரம் செய்யுங்கள்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | " | " | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு | " | " | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

மானேஜர்,
"ஏல விவசாயி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, கோம்பை.

1913 வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900000 பங்குகளின் பேரில் 2700000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பி வைத்தும் பம்பை, கல்கத்தா, காராச்சி முதலிய துறை முகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆகரில், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும். இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையுமடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிட்டெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.



Edited and Published by R. Narayanaswami on behalf of The Travancore Cardamom planters' Association. Printed at ANANDA PRESS, Uthamapalayam.